Estd.
1923

மலர் 18
இதழ் 9

ஜகன்மோகினி

ஆசிரியை :
வை. மு. கோதைநாயகி அம்மாள்

PHONE:
86019.

தயாநிதி

(தொடர்ச்சி)

77

மற்ற முக்கிய அம்சங்கள்

வாணியின் பிரஸாதம்—"கத்யோதகாம்தி" ராகம்.
வனிதா மண்டலம்—வை. மு. கோ.
பிரிக்கமுடியாத பதங்கள்— ,,
ரேடியோ டயரி—"நித்யானந்தர்"
சித்திர ரகளை—"கார்த்திகை"
க்ஷேமலாபங்கள்—ஆசிரியை.

ம
து
ரை

OFFICE OF THE ... OF BOOKS
14 OCT 1941
MADRAS

ஸ்ரீ மீனாக்ஷி கோவிலும் குளமும்
5 போடோ படங்கள் : : "ஸ்ரீவத்ஸன்."

JL
னை211,N22817
N41.8.9
183057.

வது
கினி
சுரம்

சுடர்விளக்கு
அணா 6.

அணா 2
காசு 12

...மோகினி காரியாலயம், சென்னை.

* ஸ்ரீமீனுக்ஷி *



ஜகன்மோகினி

கோவிலும்



குளமும்



ஸ்ரீவத்ஸன்



மதுரை



ஸ்ரீராமஜெயம்.

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. —ஸ்ரீ வீரராகவ கவி.

மலர் 18	விஷு வருஷம் ஆவணி மீ செப்டம்பர் 1941	இதழ் 9

ராகம்—முகாரி

பல்லவி

தூதுசெல்ல மாட்டாயோ?—துணைவனிடம்
தூதுநீ சென்றால் குறைவோ?—கோல்தும்பி. (தூது)

அனுபல்லவி

ஊதிமலரெல்லாம் நீயென் பெறுதி?—கோல்தும்பி!
தாதுநறுந்துழாய் தாழ்ந்தூதாய்—கோல்தும்பி. (தூது)

சரணம்

சோதிவானவன் துணைவனைக் கண்டு நீ
"கோதிலா குணத்தவள்"—என்றே கூறுவாய்
ஏதவன் உரைப்பினும் அன்புடன் ஏற்று, அவன்
பாதமலரை இவ்வடியாள் பணிந்திடத் (தூது)

—"பித்தன்"

14 OCT 1 ... MADRAS 18305

மதுரை - கோவிலும் குளமும் - சில படங்கள்

நமது மாகாணத்தில் சென்னைக்கு அடுத்தபடியாக மிகப் பெரிய பட்டணம் மதுரையே. அதன் பெருமைக்குக் காரணமாகவுள்ளவைகளில் சில அங்குள்ள பண்டையகாலக்கோவில்களும், கட்டிடங்களுமாகும். அவற்றுள் மிக அரிய சிற்ப வேலைகள் செய்யப்பட்டு யாத்ரீகர்களின் உள்ளத்தைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளது ஸ்ரீமீனாக்ஷியம்மன் கோவில் தான், என்பதைப்பற்றி அதிகம் சொல்லவேண்டியதில்லை. ஷை கோவிலில் எடுக்கப்பட்ட படங்களில் ஐந்தை இவ்விதழில் பிரசுரித்திருக்கிறோம்.

இவற்றுள் மேல் வரிசையில் தெற்கு கோபுரத்தோற்றம் முதலிலும், மேற்கு கோபுரத்தோற்றம் மூன்றாவதாகவும் அச்சிடப்பட்டுள்ளன. மற்ற மூன்று படங்களும் ஷை கோவிலினுள்ளேயுள்ள சிறிய குளத்தின் கரையில் வெவ்வேறு திக்கில் நின்று எடுக்கப்பட்ட மூன்றுவித தோற்றங்கள். முதலில் குறிப்பிட்ட இரு கோபுரங்களும் ஒரே மாதிரியான சிற்ப வேலைகளைக் கொண்டிருப்பினும், ஒன்றில் ஒளியும் நிழலும் கலந்திருப்பதாலும், மற்றொன்றில் சூரிய வெளிச்சம் முழுதும் பாவியிருப்பதாலும், ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்டதாகக் காண்கின்றன. மேற்குறித்த எல்லா படங்களும் மாலையில் எடுக்கப்பட்டன.

மதுரைக்கு 12 மைல் தூரத்திலுள்ள அழகர்கோவில் என்னும் திருமாலிருஞ்சோலை க்ஷேத்திரத்தின் படங்கள் ஏற்கெனவே நமது மோகினியின் ஏப்ரல் இதழில் வெளியானது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

—வை. மு. ஸ்ரீ.

க்ஷேமலாபங்கள்

அன்பர்களே !

சென்ற இதழில் தெரிவித்தபடியே சிறிய புத்தகம் "சுடர் விளக்கு" என்கிற பெயருடன் ஆண்டவனருளால் விற்பனைக்குத் தயாராகிவிட்டது என்பதை சந்தோஷத்துடன் தெரிவிக்கிறேன். பல அன்பர்கள் நான்கணு ஸ்டாம்பாக அனுப்பியதற்கும், சிலர் வேறு புத்தகங்களுக்கும் இதற்கும் சேர்த்து மணியார்டர் அனுப்பியுள்ளதற்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

புத்தகத்தின் அளவுபெரிதாகி, அடக்கவிலையும் அதிகமாகி, நான்கணுவுக்குக் கட்டுப்படியாகாதுபோனதால் அதன் விலை ஆறணுவாக வைத்திருக்கிறது. ஆயினும், ஏற்கனவே 4 அணு அனுப்பியவர்களுக்குப் புத்தகத்தை 2-ந்தேதி அனுப்புகிறோம்.

இம்மாதக் கடைசிக்குள் வாங்குபவர்களுக்கு 5 அணுவுக்கு (2 கூபன்கள்) கொடுக்க ஏற்பாடுசெய்துள்ளோம். இதே விலைக்கு ஏஜன்டுகளிடமும் கிடைக்கும்.

மேல் அட்டையில் ஒருவர்ணப்படமும், உள்ளுக்குள் இருபக்கப் படமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அப்புத்தகத்தின் மேல் அட்டையில் 5முகங்களுடன் அலங்காரமாக ப்ரகாசிக்கும் குத்துவிளக்கு போல் உள்ளேயும் 5 கதைகள் இருக்கின்றன. நேயர்களின் அன்பை எப்போதும்போல் கோருகிறேன்.

நிற்க, "பலகாரவகைகள் ஏன் ஒரு பகுதியில் சேர்க்கப்படாது ?" என்று சகோதரிகள் பலர் எழுதியிருப்பதையும், புதிய மாதிரியாகக் கிடைத்தால் பிரசுரிப்பதாயும் முன்பொரு இதழில் மோகினியில் நாம் வெளியிட்டிருந்ததை சகோதரிகள் மறந்திருக்க மாட்டார்கள். அவர்களின் விருப்பப்படி வனிதாமண்டலத்திலேயே இரண்டு புதிய பக்ஷணங்கள் செய்யும் முறைகளை இவ்விதழில் பிரசுரித்திருக்கிறோம். கடிதம் எழுதிய சகோதரிகளுக்கு திருப்தியை அளிக்குமென்று நம்புகிறேன். புதிய புதிய பலகாரங்கள் செய்யும் முறைகளை, சகோதரிகள் தாம் செய்து பார்த்துப் பின் அதை எழுதியனுப்பினுல் மோகினியில் பிரசுரிக்கிறோம்.

இப்போது புதிதாகச் சேரும் சந்தாநேயர்கள் 'எங்களுக்கனுப்பும் சஞ்சிகையில் ஏன் கதைமாத்திரந்தானிருக்கிறது ?' என்று எழுதுகிறார்கள். இதற்குமுந்திய பிரதிகள் முழுதும் செலவாகிவிட்டதால் கதையைமாத்திரம் இரண்டாம் பதிப்பு போட்டனுப்பவேண்டியிருக்கிறது. அன்பர்கள் முன்னதாகவே சந்தாதாரராகிவிட்டால் எல்லா பகுதிகளுடன் சேர்ந்து முதலில் வெளியாகும் பிரதிகள் கிடைக்குமென்பதை கவனிக்கவும்.

நன்றியுள்ள,

1—9—41.

வை. மு. கோதைநாயகி.

நித்யானந்தரின் ரேடியோ டயரி

(வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A., B.L.)

லாவண்ய சர்மா:—நமஸ்காரம் மிஸ்டர் ஆனந்தம்! என்ன உங்களைக் காண்பதே அபூர்வமாயிடுத்தே !

நித்யானந்தர்:—வரணும், வரணும், சர்மாஜீ! ரொம்பநாளாயிடுத்து இந்த இரண்டு மாதத்திலே நாலு நாள்கூட வீட்டிலே சேர்ந்தாப்பலே இல்லை! எப்படியோ பல்லை கடிச்சிண்டு மண்மேலூருக்கும் இவ்வூருக்குமாக அல்லாடிக்கொண்டிருந்தேன்.

லா:—ஓகோ! மண்மேலூருக்குத் தான் போயிருந்தீரோ! அது தெரியாததனால் உம்மை ஈதான் தூக்கிக் கொண்டு போய்விட்டதோ, அல்லது எறும்புதான் இழுத்துக்கொண்டு போய்விட்டதோ அல்லது காற்று அடித்துக்கொண்டுபோய்விட்டதோ தெரியவில்லையேயென்று நம்ம கோணங்கி அளந்துண்டிருந்தான்.

நி:—அடேயப்பா! பலே பேர்வழியாயிருக்கிறானே அவன். இப்போது என்ன பண்றான் ?

லா:—பண்ணுவதென்ன விருக்கிறது. தான் எவ்வளவு கெஞ்சியும் தன் தகப்பனார் ரேடியோ வாங்காம விருப்பதைப்பற்றிபுகார்செய்கிறான்.

நி:—அது வாஸ்தவந்தானே. அவனுக்கு ரேடியோ செட்வாங்கிக் கொடுத்தால் வீட்டோடுகிடந்து தன் பாட்டுப் பயித்தியத்தையும் திருப்தி செய்துகொள்வானேல்லியோ ?

லா:—என்ன நீர் சொல்வதைப் பார்த்தால் சமீபத்தில் ரேடியோ நிகழ்ச்சிகள் ரொம்பவும் ரஸிக்கத் தக்கவையாகவிருக்கின்றனவென்றல்லவா ஏற்படுகிறது.

நி:—ஆமாம் ஸ்வாமி! ஆமாம். இந்த நாலுவாரமா பாரும். ஏதாவது நல்லநிகழ்ச்சி இருந்துண்டேஇருக்கு.

1உயன்றே இரண்டு "ஏ. ஒன்" நிகழ்ச்சிகள் திருச்சியில் ஒலிபரப்பப் பட்டன. ஒன்று "சங்கமம்" என்ற சிறு நாடகம். மகா புத்தரின் வாழ்க்கையில் ஒருருசிகரமான சம்பவத்தை வெகு அழகாக நாடகப்படுத்தி, மிக நன்றாக நடித்து ஒலிபரப்பியது பாராட்டத்தக்கதாயிருந்தது. அன்றே ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளையின் நாகஸ்வரக்கச்சேரி அபாரமாயிருந்தது. சிம்மேந்திர மத்தியம ஆலாபனை கானாம்ருதமாகவிருந்தது.

2உயன்று "காவேரி" என்ற விசேஷ நிகழ்ச்சி மிகவும் ரஸிக்கத் தக்கதாயிருந்தது. பொருள், நடை, தயாரிப்பு முதலிய எல்லா அம்சங்களிலும் சிறந்து விளங்கியதால் ஷை இசைச்சித்திரம் திருச்சி நிலையத்தின் மகத்தான வெற்றிகளுள் ஒன்று என்பதில் சந்தேகமேயில்லை. ஸ்ரீமதி லலிதா வெங்கடராம் அவர்களின் சங்கீதத்தை (ஒலிப்பதிவை) நன்கு உபயோகித்து ஷை நிகழ்ச்சியை சோபிக்கச் செய்தார்கள். ஒன்றரை மணிநேரம் செல்வதே தெரியாது, அவ்வளவு நன்றாகவிருந்தது.

3உ "நட்பும் நீதியும்" என்ற நாடகம் சென்னையில் ஒலிபரப்பப் பட்டது. ஏற்கெனவே இந்நாடகம் திருச்சியில் ஒலிபரப்பப்பட்டபோது அந்நிலையத்திற்கும், சிட்டிக்கும் புகழ் மாலைகள் கிடைத்தன. சிட்டியின் கற்பனை, நடிப்பு; எம். டி. பார்த்தஸாரதியின் நடிப்பு போற்றத்தக்கதாயிருந்தன. ஒருதரம் ஒலிபரப்பிய நாடகத்தைத் திரும்ப ஒலிபரப்பினால் அவ்வளவாக ருசிக்காது என்று சொல்வது எவ்வளவு தூரம் உண்மைக்கு முரணானது என்பது அன்று தெரியவந்தது. முதல்தரம் கேட்டபோது ஏற்பட்ட ஆனந்தத்தைவிட, இரண்டாம்தரம் கேட்கும்போது ரஸனை அதிகமாகவல்லவா இருந்தது. அன்றயதினமே ஸ்ரீமதிபங்களூர் நாகரத்தினம்மாளின் கச்சேரி (ம) வழக்கம்போல 'கர்நாடகமாக' இருந்தது. "இருபது வருடங்களுக்குமுன் அவரது பாட்டு எப்படியிருந்ததோ அப்படியே இன்றும் கணீரென்று இருக்கிறதே!" என்று பெரியவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

5௨ கூனிக்கும் சகுனிக்கும், மைதிலிக்கும் மண்டோதரிக்கும், வால்மீகிக்கும் லக்ஷ்மணனுக்கும் இடையே நடைபெறுத சம்பாஷணைகளை ஸ்ரீ. டி. எஸ். முனுஸ்வாமி சிறந்த கற்பனை சக்தியுடன் எழுதியதை ஒலிபரப்பினுர்கள். (தி.)

6௨ குமாரி பாலம் (தி) முன்னைவிட இப்போது மிகவும் அபிவிருத்தி செய்திருப்பது பாராட்டவேண்டியதுதான். அபூர்வ ராகங்களையும் தைரியமாக 'சிட்டையாக' ஆலாபனை செய்து அவைகளில் ஸ்வரப்ரஸ்தாரமும் செய்தது ஆச்சரியமாயிருந்தது. அன்றே மாடசாமியின் வண்டி என்ற நிகழ்ச்சி (தி) ரஸமாயிருந்தது. யுத்தத்தினுல் 'பெட்ரோல் ரேஷனிங்' உள்ள இச்சமயத்தில் மாடசாமி தன்னுடைய மாட்டுவண்டியின்பெருமையை மிகைப்படுத்திக் கூறுவது மிகவும் பொருத்தமானதல்லவா?

9௨ திருச்சியில் கிராமச்சாவடியில் நடந்த குரங்கு ஆராய்ச்சி 'வயிறை வெடிக்கும் வண்ணம்' கலாட்டா செய்துவிட்டது. அந் நிகழ்ச்சி ஹாஸ்ய வேடி நம்பர் ஒன்!

10௨ ஒலிமலரின் 17-வது இதழ் (தி) பல அழகிய அம்சங்களைத்தாங்கி வெளிவந்தது. ரகஸிய மண்டபத்தில் அந்தராத்மாவுடன் சம்பாஷணையும், கானலோலாவின் இசைச்சித்திரமும் சிறந்த கற்பனைகள். நவீன ஹரிச்சந்திரனின் அண்டப்புளுகு மூட்டைகள் "ஏ. ஒன்."

12௨ ஸெலிமா என்ற நாடகம் (தி) நன்ருக நடிக்கப்பட்டது. ஆனுல் முடிவு 'மொட்டை' யாகவிருந்தது.

13௨ தர்மாம்பாள் சச்சேரியும், (ம) சுந்தரேசய்யரின் பிடிலும் (தி) தான் இன்றையவிசேஷநிகழ்ச்சிகள்.

14௨ மன்னுர்குடி எஸ். டி. பட்டம்மாவும், ராஜப்பாவும் (தி) விரைவாக முன்னேறி வருகிறுர்கள். அன்று பாடிய சாவேரி, கரஹரப்ரியா ஆலாபனை நல்ல 'வழியில்' அமைந்திருந்தது.

18௨ வி. வி. கோபாலரத்னம் அவர்களின் "செல்லக் குழந்தை—ஸ்னேகம் தேடுதல்" என்ற பேச்சு (ம) வழக்கம்போல நன்ருயிருந்தது.

19௨ வாழ்க்கைப் பலகணி என்ற தொடரில் ஒலிபரப்பப்படும் ஒவ்வொருநிகழ்ச்சியும் மிகவும் இயற்கையாகவும், ரஸிக்கத்தக்கதாவுமிருக்கிறது. இன்று வளையல் வியாபாரியின் வாழ்க்கைச் சித்திரம் 'சுகி' யால் நன்கு வரையப்பட்டு ஒலிபரப்பட்டது. சென்னையில் ஸ்ரீமதி ஆண்டாளம்மாளின் பாட்டு விசேஷமாயமைந்தது.

20௨ சுந்தரகாமாக்ஷியின் பாட்டு (தி) இதுவரை இவ்வளவு நன்ருக அமைந்ததேயில்லை.

22௨ "சம்பங்கி" என்ற நிகழ்ச்சியில் ஸ்ரீமான் சம்பங்கி எடுத்ததெற்கெல்லாம் சம்பங்கியென்று பெயரிட்டு "ஸர்வம் ஸம்பங்கி மயம்" என்ற சுழலில் அகப்பட்டுக்கொண்டு விழித்ததை நினைத்தால் இப்போதும் சிரிப்பு வருகிறது.

24௨ ஒலிமலரில் "கடத்தின்சரித்திரம்" என்ற கானலோலாவின் தயாரிப்பு நன்ருயிருந்தது.

25௨ வண்டிச் சண்டை விஷயமாக ரேடியோ பஞ்சாயத்து கூடி தீர்ப்பளித்தது. வழக்கம்போல வெகு இயற்கையாகவிருந்தது.

26௨ விநாயக சதுர்த்தியை கிராமத்தில் (தி) விமரிசையாகக்கொண்டாடினுர்கள். விநாயகரின் திருமணத்தை சோமுவின் பேனு ஏற்பாடு செய்தது.

29௨ கிருஷ்ணனும், கர்ணனும் என்ற நாடகம் ஸ்ரீ பி. ஸ்ரீ ஆசாரியா அவர்களால் எழுதப்பட்டு சென்னை நிலையத்தில் ஒலிபரப்பப்பட்டது. இது ஸ்ரீ ஆசாரியாவுக்கு ஒருவெற்றி.

லா:—பெரிய வித்வான்களின் கச்சேரி ஒன்றுமேயில்லையா? ஒருநிகழ்ச்சியைக்கூட குறிப்பிடவில்லையே!

நீ:—சரிதான். சர்க்கரை தித்திக் ப்ரபலஸ்தர்கள் பாடினுர்கள்—தம் கின்றதென்று ஒவ்வொருதராமும் தம் முறையில் சிறந்து விளங்கின சொல்லவேண்டுமா என்ன? பல அக் கச்சேரிகள்.

பிரிக்க முடியாத பதங்கள்

வை. மு. கோ.

நாம் பேசும்போது பழமொழிகளும் எதிர்மறைகளும் எப்படி சர்வ சாதாரணமாய் வருகின்றனவோ அதேபோல் இரட்டைப் பதங்களும் ஏராள மாக நம்மையறியாமலேயே வருகின்றன. இதை சிறிய வயதினர்க் கூட் டத்தில் விடப் பாட்டிமார்களின் கூட்டங்களில் தாராளமாகக் காணலாம்.

"ஒங்க பெண் வரவில்லையோ?" என்று சேச்சி பாட்டி துப்பிப் பாட் டியைக் கேட்டாள். "திடீன்னு அவ எதுக்கு வரா! இப்போ என்ன நாளா கிழமையா! கல்யாணமா கார்த்தியா! வெட்டிக்கு வரமுடியுமா! அவளுக்கு வீடும் வாசலும், மாடும் கன்றும், வருவாரும் போவாரும் தினம் வைபோகந் தான். ஒச்சலா ஒழிவா! விருந்தில்லாத சோறு மருந்துதான். அவ இருக்கிற ஊருலே கோவுலும் கோளமும் இருக்கு. தினம் தேரும் திருநாளும் நடந்த மணியந்தான். வீட்டுலே பத்து பசங்கள். ஓரத்தாள் ஓர்படிகள் இருப்பதால் வரமுடியுமா! என்பாள்.

சேச்சி:—ஆமாம். சம்சாரிக்கு சாய நேரமேது? பொங்கவும் பொறிக் கவும், அறைக்கவும் கரைக்கவும் சரியாய்ப்போகும். அதோடு பண்டிகே பர்வம், நல்லது பொல்லாது, நோவு நொடி, சாவு வாழ்வு, தேவசம் திங்கள், அறப்பு படுப்பு இத்தனைக்கும் மீறி வரமுடியுமா! கஷ்டந்தான். ஆசை வெக்கமறியாதுன்னு கேட்டேன்.

இதுபோல் இரட்டைப் பதங்கள் நடைமுறையில் வராது பேசவே முடியாது. இவைகளில் அர்த்தபாவம் இரண்டுக்கும் ஒன்ருகவே சில பதங் களில் இருக்கின்றன. சிலவற்றிற்கு வேருக இருக்கின்றன. இதை யறிந்து பிரித்தோ, மாற்றியோ பேசவும் முடியாது. பேசினுலும் அழகாயிருக்காது. அனுபவத்திலும் ஏற்காது. பண்டிகையும், பருவமும் என்பதில் பண்டி கைக்கு அடுத்த பருவத்தில் என்ன அர்த்தமிருக்கிறது? நடைமுறையில் இரண்டும் பிணைக்கப்பட்டுவிட்டதால் அதையே சொல்லிவருகிறோம். அதேபோல்தான் திவசமும் திங்களும் என்பதுவும் இருக்கிறது. பிரிக்க முடியாத முறையில் வழக்கத்தில் வந்துவிட்டதால் அதில் எதையும் கவ னிப்பதில்லை. வரவு செலவு, கணக்கு வழக்கு, துடுக்கல் வாங்கல், ரொக் கம் ரோதனம், வட்டி வாசி, நிலம் புலம், நகை நட்டு, பண்டம் பாடி, சொத்து சொதந்திரம், கறவையுங்கட்டும், ஆளும் அம்பும், சேவகனும் சோக்கட்டானும், கட்டும் காயிதாவும், அட்டமும் சட்டமும், ஒறவா! ஒட்டா! தூக்கா தோகையா! மரியாதையா மட்டா! எத்தமா எடுப்பா! பாட்டா கதையா, சத்திரமா சாவடியா! சண்டையும் சச்சரவும், ஆபத்து சம்பத்து. தட்டினுல் முட்டினுல், ஏறினுல் இறங்கினுல், சம்மந்தி சாவந்தி.

இதுபோல் பிரிக்கமுடியாத பதங்கள் இன்னும் எத்தனையோ இருக் கின்றன. இவைகளின் அர்த்தம் பார்க்கவும், உபயோகிக்காமலிருக்கவும் முடியுமா! இரட்டைப் பதங்கள், பழமொழிகள்; எதிர்மறைகள் இவைகள் இல்லாது ஒருவராலும் பேசவே முடியாது.

மங்:—கிருஷ்ணன் பிறந்தாரா! எத்தனைவிதம் பக்ஷணங்கள் செய்தாய்? மாப்பிள்ளை வந்ததால் தடபுடலாகத்தான் இருக்கும்?

கல்:—என்ன தடபுடல், எல்லாம் வழக்கம்போலத்தான் நடந்தது. உங்க வீட்டில் என்று கிருஷ்ணன் பிறந்தார்?

சாவி:—என்ன அதிசயமோம்மா! வருஷா வருஷம். இரண்டு தினங்களில் இரண்டு வகைப்பட்ட ஜாதியார்கள் பண்டிகையைக்கொண்டாடுவார்கள். இந்ததரம் நான்கு நாள்கள் கிருஷ்ணன் பிறந்தாராம். மாசக் கடைசியிலும் சிலருக்குப் பிறக்கப் போகிறாராம். பகவான் மனிதர்களை ஆட்டிவைக்கும் சூத்ரதாரி என்பது போய், அவரை அவர்கள் இஷ்டப்படி ஆட்டி வைக்கும் காலமாயிருக்கிறது. எல்லாம் வேடிக்கையாகத்தான் இருக்கிறது. இந்துமதிதான் புதிய புதிய பக்ஷணங்கள் கண்டு பிடித்துச் செய்தாளாமே!

பானு:—எங்க வீட்டிற்குக்கூட அனுப்பினாள். சில வகைகள் புதிய தினுசாகத்தான் இருந்தன. ருசியாகவும், நன்றாகவும் இருந்தன.

சுமதி:—அப்படியா செய்தி? எனக்கனுப்பவேயில்லையே! கொடுத்தனுப்பியதை நீ சாப்பிட்டாயா!

பானு:—அதென்ன அப்படிக் கேட்கிறாய்? சாப்பிடாமல் குப்பையிலா போடுவோம்? வெகு நன்றாக சாப்பிட்டோம். இன்னும் இருந்தால் கூட சாப்பிட்டிருப்போம். பன்னாடைபோல் தின்றுவிட்டேன் என்று பரிகஸிக்கிறாயா!

மங்:—அப்படி அவள் சொல்லவில்லை. பானு! உலகம் பலவிதமல்லவா! நாம் ஆசையுடன் பலகாரம் அசல் நெய்யிலேயே செய்து அனுப்புவதை சிலர் அலக்ஷ்யமாக எண்ணி நிர்த்தாக்ஷிண்யமாய் வேலைக்காரருக்கும்,ட்ரைவருக்கும் வாரிக்கொடுத்துவிடுகிறார்கள். அந்தமாதிரி ஜம்பக் கட்டைகளைப்போல் நீ செய்யாமல் சந்தோஷமாய்ச் சாப்பிட்டதுதான் பெருமை.

பானு:—அப்படிக்கூடவா செய்வார்கள்?

கல்:—ஏன் செய்வதில்லை? ஸ்ரீ ஜயந்திக்கு பக்தியோடு பகவானுக்குச் செய்து நிவேத்யம் பண்ணின பிறகு எல்லோருக்கும் பங்கிடுவது ஒரு சம்பிரதாயமாகிவிட்டது. சில அல்பர்கள் தம் வீட்டுப் பலகாரம் இலுப்பெண்ணெயும், தேங்காயெண்ணெயும் கொட்டிச் செய்ததாயினும் அதை மிக்க பெருமையாகப் பேசிக்கொண்டு பிறர்வீட்டுப் பலகாரங்களை அலக்ஷியம் செய்வதை நான் ப்ரத்யக்ஷமாய் வெறும் நாட்களிலேயே பார்த்திருக்கிறேன். இன்னும் அயம் விசேஷ: ஸ்ரீ ஜெயந்திக்குக்கேட்க வேண்டுமா! ஏகப்பட்டவகைகளைப் பார்க்கும்போது தூக்கிக்கொடுக்காமல் அத்தகையோரிருப்பார்களா! அவர்களது அல்க்ஷிய புத்திபோகுமா! அதற்காகத்தான் கேட்டாள்.

பானு:—அதென்ன ராங்கியோம்மா, எனக்குத் தெரியாது. இந்து அனுப்பிய புதிய தினுசுகள் இன்னும் கொஞ்சம் இருந்தால்கூட எங்க எஜமானர் சாப்பிட்டிருப்பார். எத்தகைய பலகாரம் செய்திருந்தாலுங்கூட நாங்கள் அலக்ஷியமாக வீசி எறியவேமாட்டோம். துச்சமாயும் பேசமாட்டோம். 'வீட்டில்செய்ததா! ஓட்டலில் வாங்கியதா! யார் வீட்டி

லாவது கொடுத்ததா !' என்கிற நோணவட்டங்கள் பேசவும் தெரியாது. அன்பாக அனுப்பினர்களே என்று சந்தோஷத்துடன் சாப்பிடத்தான் தெரியும். அப்படி தின்னமுடியாது கேவலமாயிருந்தால் அதை வேண்டுமாயின் வேலைக்காரருக்குக் கொடுக்கலாம். பிறருக்குக் கொடுப்பதற்காகச் செய்யும் பண்டத்தை யாரும் நன்ருகவும், சுத்தமாகவும் ருசியாகவுந்தான் செய்வார்கள்.

மங்:—பானு ! அப்படி கேவலமான பக்ஷணமாகவிருந்தால்கூட அதை வேலைக்காரர்களுக்குக் கொடுத்ததாகவோ, வீசி எறிந்ததாகவோ இரண்டாம் பேருக்குத் தெரியாமல்தான் செய்யவேண்டும். இம்மாதிரி செய்தது, கொடுத்தவர்களின் காதில் பட்டால் வருத்தப்படுவார்களல்லவா ! சரி! அது கிடக்கட்டும். இந்து என்னமோ புதிய தினுசு பலகாரம் செய்ததாகச்சொன்னுயே அது என்னது சொல்லுபார்க்கலாம். நாங்களும் செய்து சாப்பிட்டுப் பார்க்கிறேம்.

சுமதி:—செய்தவளையே கேட்டால்தானேதெரியும்; இவளைக்கேட்டால் என்ன தெரியும், என்ன இந்து எங்களுக்குச் சொல்லமாட்டாயா!

இந்து:—அடாடா ! இதென்ன பிரம்ம ரகஸியமா! எல்லோருக்கும் தெரியவேண்டும், எல்லோரும் செய்து சாப்பிடவேண்டும் என்பது தான் என் எண்ணம்.

சுமதி:—தித்திப்பு பக்ஷணங்கள் மட்டும் கணக்கு வழக்கில்லாதிருக்கின்றன. புதிது புதிதாயும் செய்து ஏதோ ஒரு பெயரைச் சூட்டிவிடுகிருர்கள். அதற்குச் சரியாய் உப்பு வகைகள்தான் அதிகம் இல்லை. அப்பொழுது செய்து அப்பொழுதே சாப்பிடுவதற்குத்தான் உபயோகப்படுகிறது. நீடித்துவைப்பதற்கு மனஉகப்பு, தேன்குழல், முறுக்கு,சீடை, காருப்பூந்தி, ஓமப்பொடி, மிக்ஸ்சர், காரபிஸ்கேட், காருசேவு, இதைத் தவிர வேறு இல்லை. புதிதாகக்கண்டு பிடித்திருப்பது உப்பு பக்ஷணமா ! தித்திப்பு பக்ஷணமா !

இந்து:—இரண்டுந்தான் செய்யலாம்;செய்தேன். அதாவது,-முதலில் தித்திப்பு சொல்கிறேன் கேள். கடலைப்பருப்பை வெறும் வாணலியில் போட்டு வாஸனை வரும்படி பொன்நிறமாக வறுத்துக்கொண்டு அதை ஊறவைப்பது. அதற்கு பால் கோவா சக்கரை போடாமல் கிளறி வைத்துக்கொள்வது. கடலைப்பருப்பை நன்ருகவும் கெட்டியாகவும் உரலில் அறைத்துக் கொள்வது. அறைத்தவிழுதிற்குச் சரியாகவும், கோவாவுக்குச் சரியாகவும் சர்க்கரையை திட்டமாகப் போட்டு கெட்டி பாகாகச் செய்துகொண்டு முதலில் கடலைப்பருப்பு விழுதைப் போட்டுக் கிளறுவது, கொஞ்சம் பதமாகியதும் கோவாவைப்போட்டு சேர்த்து நிழல் எரிச்சலில் கிளறுவது, நன்ருகச் சேர்ந்து கொதித்த பிறகு நல்ல நெய்யைவிட்டு மீண்டும் கிளறுவது, நன்ருக உருண்டு லேகியத்தைப்போல் வந்ததும் பச்சை கற்பூரம், குங்குமப்பூ, இரண்டையும் பாலில் கரைத்து சேர்த்துக் கிளறிக் கொள்வது. பாதம்பருப்பு, முந்திரி பருப்பு, வெள்ளரிபருப்பு, பிஸ்தா முதலியவைகளை துண்டுதுண்டாக நறுக்கி வறுத்து வைத்துக்கொண்டு ஹல்வாயை இறக்கியபிறகு அதில் சேர்த்துக் கிளறிவிடலாம். பில்லையாகவேண்டியவர்கள், இன்னும் சற்றுநேரம் பாகு முதிரும்படிக் கிளறி பிறகு தட்டில் நெய் தடவி அதில் ஹல்வாயைக் கொட்டி பரப்பி பிறகு மேற்சொல்லிய பருப்புகளைத் தூவி லேசாகத் துடுப்பால் அமுக்கிப் பின் கத்தியால் பில்லை கீறுவது. ஆறியபிறகு எடுத்து ஸ்வாமிக்கு நைவேத்யம் செய்வது.

கல்:—பேஷ்! இது நன்றாக இருக்கும்போல் இருக்கிறதே! உப்பு பக்ஷணம் எது? சொல்லு.

இந்து:—கடலைப் பருப்பை ஊற வைத்துக்கொள்வது, கால்படி பருப்புக்கு பத்துபலம் முந்திரிப்பருப்பு தனியாக வைத்துக்கொள்வது. கடலைப்பருப்பை நன்றாக வெண்ணெய்போல் அறைத்துக்கொள்வது. கெட்டியாக இருக்கவேண்டும். பச்சைமிளகாய், பச்சைகொத்தமல்லி, உப்பு, பெருங்காயம், தேங்காய்த் துருவல் முதலியவைகளை வெண்ணெய்போல் அறைத்து கோதுகள் தட்டாது வடிகட்டியில் வடிகட்டிக் கொண்டு இந்த பருப்புடன் சேர்த்து அறைப்பது. முந்திரிப்பருப்பைக் கடைசீயில் சேர்த்து கொஞ்சம் சுமாராக நறநறவென்று அறைத்து விழுதைக்கெட்டியாக எடுத்துக்கொண்டு அழுக்கு இல்லாத சுத்தமான இடத்தில், வெள்ளைத் துணியை விரித்து அதன்மீது இந்த மாவை நன்றாக அதிக கனமில்லாமல் அடைபோல் தட்டுவது. கொஞ்சம் காற்றில் ஈரம் இழுத்தபிறகு விதவிதமான பிஸ்கட் அச்சுக்களில் இந்த மாவில் ஒன்றொன்றாகத் திருகி அந்த துண்டுகளை ஒடியாமல் எடுத்து காய்ந்த நெய்யில் போட்டு நன்றாகப் பொறித்து எடுத்து சூடாக்கிய பாத்திரத்தில் வைத்துவிடவேண்டும். நமுத்துப்போவதே இல்லை. கரகரவென்று இருப்பதோடு நல்ல மணமும், ருசியுமாகவிருக்கும். பத்து நாட்களானாலும் கெடுவதில்லை. ஸ்வாமிக்கு நிவேத்யம் செய்து சாப்பிடவேண்டியதுதான்.

மங்:—அதுகூட நீ சொல்லித்தா வேண்டுமா! ஆமாம். இதைச் செய்யக் கடலைமாவை உபயோகித்தால் என்ன?

இந்:—அது இத்தனை நன்றாக வரவில்லை. கல்லுபோல் போகிறது. மணங்கூடக் குறைவாகவிருக்கிறது.

பானு:—கடலைப்பருப்பை அறைத்துப்பண்ணால் மெத்தென்று ஆகாதே.

இந்:—எல்லாம் பதத்தோடு செய்தால்தான் நன்றாயிருக்கும். கண்ணுக்கு கணிசமும், பதமாகச் செய்யும் திறமையும் இருந்தால் ஏன் கெட்டுப்போகும்? அரைகுறையாக வேகவைத்தால் கறகறப்பு வருமா! காந்தவைத்தால் ருசி வருமா! எல்லாம் பதத்தில்தான் இருக்கிறது.

சாவி:—இதுகூட நன்றாயிருக்கும்போல்தான் தோன்றுகிறது. இவைகளுக்கு என்ன பேர் வைத்தாய்?

இந்:—முதலில் எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. கடலைபருப்பு அல்வா, கடலை பருப்பு பிஸ்சேட் என்று வைக்கலாமா என்று எங்க எஜமானரைக்கேட்டேன். அவர் "இது நன்றாயில்லை. சற்று தடபுடல் பேராக இருந்தால்தான் நன்றாயிருக்கும்; ஆகையால், "ஜகன்மோகினி ஹல்வா, ஜகன்மோகினி கேக்கு" என்றும் பெயர் வைத்தால் நன்றாயிருக்கும்" என்றார். அதையேகூட இருந்தவர்களும் ஆமோதித்தார்கள். அதுவேதான் அததற்குத் திருநாமமாகிவிட்டது.

மங்:—எனக்குக்கூடப் பிடித்துத்தான் இருக்கிறது. இன்னும் என்னென்ன புதிய தினுசுகள் செய்தாய் சொல்லு.

இந்:—மணியைப் பார்த்தாயா! குழந்தைகள் வந்துவிடுவார்கள். டிப்பன் செய்யப் போகவேண்டும். நாளைக்குச் சொல்கிறேன்.

மங்:—சரி. சரி. வெள்ளிக்கிழமை குங்குமம் இட்டுக்கொண்டு தாம்பூலம் வாங்கிச் செல்லு...

வாணியின் பிரசாதம்

ஸாஹித்யகர்த்தா : வை. மு. கோதைநாயகி

32-வது **மேளகர்த்தா.**

இராகம் - கத்த்யோத காம்தி. **தாளம் - த்ரிபுடை.**

பல்லவி

உன்னாலாவது உண்டோ வுலகில்
உணர்ந்திடுவாய் மனமே (உன்)

அநுபல்லவி

அன்னாள் அமலன் ஆக்கிய விதியினை
இன்னாள் மாற்றிடல் ஏலுமோ மனமே (உன்)

சரணம்

ஆவதும் அழிவதும் அவனருளன்றோ
தாவர முதல்பக்ஷி ஜீவன்கள் பலவும்
நோவதினால் இன்பம் நுகர்ந்திடல் போமோ
தேவதேவன் கோதாநாதனை துதிசெய் (உன்)

ராகவர்த்தனி

ஜன்ய ராகம் :

கத்த்யோத காம்தி

ஸ்வரப்படுத்தியவர் : ஏ. பார்த்தசாரதி

ஆரோஹணம்—ஷாடவம்.

ஸ	ரி	க	ம	ப	நி	ஸ்
	ஷட்	அம்	ஸா		கை	

1—9—41.

அவரோஹணம்—ஷாடவம்.

ஸ்	நி	ப	ம	க	ரி	ஸ
	கை		ஸா	அம்	ஷட்	

ராகம் - கத்த்போத காம்தி. சதுர - த்ரிபுடை.

பல்லவி

1 ;	● ப நி ஸ்ா ஸ்ா நீ பா மா	கா ; - ரீ ;	ஸா நீ - ஸா ;
	உன் னு லா வ து	உண் டோ	வு ல் கில்
;	● ஸநி ஸா ரீ கா ; மா பா	நீ ; - ஸ்ா ;	ஸ்ரிஸ்நி - பநிபம
	உணர்ந்திடுவாய்ம ன	மே	
2 க ம	● பநி ஸ்ா;ஸ்ரிஸ்நிபா மா	கமபநி - ஸ்நிபம	கா ரீ - ஸநி ஸா
	உன்னு லா வ து	உ ண் டோ	வு ல கி ல்
;	● ஸநி ஸா ரீ கா ; மா பா	நீ ; - ஸ்ா ;	ஸ்ரிஸ்நி - பநிபம
	உணர்ந்திடுவாய்ம ன	மே	
க ம	●		

அநுபல்லவி

1 ;	● கா மா ; பா நீ ஸ்ா ;	ரீ ; - ஸ்ா நீ	பா நீ - பா மா
	அன்னுள் அ மலன்	ஆக் கி ய	வி தி யி னை
2 ;	● கா மா ; பநி ஸ்நி ஸ்ா;	நி ஸ்ரீ - ஸ்ரி ஸ்நி	பநி ஸ்நி - பா மா
	அன்னுள் அ ம லன்	ஆ க்கி ய	வி தி யி னை
1 ;	● ப நி ஸ்ா ; ஸ்ா நீ பாமா	கா ; - ரீ ஸா	ரீ கா - மா ;
	இன்னுள் மாற் றிடல்	வ லுமோ	ம ன மே
2 ;	● பநிஸ்ா ; ஸ்ரிஸ்நிபாமா	கா ; - ரீ ஸா	ரீ கா - மா ;
	இன்னுள் மாற் றிடல்	வ லுமோ	ம ன மே
;	●		

சரணம்

பா ; பா மா பா நீ பா மா	நீ பா - மா கா	ரீ ; - ஸா ;
ஆ வ தும் அ ழிவ தும்	அ வ ன ரு	ளன் றோ
ஸா ; நீ பா நீ ஸா ரீ ஸா	ரீ ; - கா மா	பா நீ - பா ;
தா வ ர மு த ல் ப க்ஷி	ஜீ வன் கள்	ப ல வும்
பா நீ ஸ்ா ரீ ; க்ா ம்ா	க்ா ரீ - ஸ்ா நீ	பா நீ - ஸ்ா ;
நோ வ தி னுல் இன் பம்	நு கர்ந் திட ல்	போ மோ
ரீ ; ஸ்ா நீ ; பா மா பா	ஸ்ா ; - நீ பா	மா கா - மா ;
தே வ தே வன் கோ தா	நா த னை	து தி செய்
; ●		

சித்திர ரகளை

கமலா! கமலா! இங்கு வா. பாட்டிக்கு நேற்று இலும்பலே வரல்லேன்னு யாரோ கண்ணு போட்டுட்டாளாம். அதனாலே இன்னிக்கு இலும்பல் அதிகமாச்சுன்னு மத்தியானம் சொன்னாளே, அதுக்காக தனக்குத் தானே த்ருஷ்டி சுத்திக்கிறா பாரேன். பலே வேடிக்கே.

கமலா:—இரு; இரு. நான் எல்லாரையும் கூட்டுண்டு வந்து காட்டறேன். இந்த தமாஷ் அப்றம் ஆப்டாது.

ராயல் டாக்கீஸ்

படமென்றால்

அதன் தினுசே வேறுதான்

சிந்தாமணி

சக்குபாய்

சகுந்தலை

மூன்றும் இதற்கு சாட்சி

இன்று அதைவிட பெரிய

சாவித்திரி

வெளிவருகிறது

சாந்தா ஆப்டே, M. S. சுப்புலக்ஷ்மி, Y. V. ராவ்

முதலியோர் நடித்தது

டைரக்ஷன் :

Y. V. ராவ்

ஸ்டுடியோ :

நியூ தியேட்டர்ஸ்

கல்கத்தா.

செப்டம்பர் மீ 4உ யன்று

மகத்தான ஆரம்பம்

சிந்தாமணி டாக்கீஸ்

மதுரை

வெல்லிங்டன் டாக்கீஸ்

திருச்சி

எடிசன் தியேட்டர்

கோயம்புத்தூர்

ராயல் டாக்கி டிஸ்டிரிபியூடர்ஸ்

மதுரை : : பெஜவாடா.

நித்யா வழக்கம்போல் சிறு பசங்களுக்குப் பாடங்கற்றுக் கொடுத்துப் பின் சாப்பாடு போட்டு பால் ஆற்றிக்கொடுத்துத் தூங்கச் செய்தாள். பசு மாட்டுக்கு வைக்கோல், தண்ணீர் இருக்கிறதா என்று பார்த்துவிட்டு கொல்லைப்புறக் கதவுகளையெல்லாம் பூட்டிக்கொண்டு வந்தாள். மணி எட்டரையாகியும் ஒருவரும் சாப்பிடவராததால் "ஸுதா!" என்று ஒரு குரல் கூப்பிட்டாள்.

பதிலே இல்லாததால் ஸுதாவின் அறையில் சென்று பார்த்தாள். அங்கு காலியாகவிருந்தது. தன் பர்த்தாவின் ஆபீஸ் ரூமிலும் ப்ரைவேட் ரூமிலும் பார்த்தாள். அவரையும் காணாததால் இன்னும் க்ளப்பிலிருந்து வரவில்லையென்று நினைத்தாள். ரேடியோவில் அற்புதமான கானமாரி பொழிந்துகொண்டிருந்ததைக் கேட்டவாறு ஈஸிசேரில் சாய்ந்தாள்.

யாரோ சென்ற நிழலைக்கண்டு கதிகலங்கிய ஸுதா சில வினாடிகள் அப்படியே தம்பித்து நின்றாள். யாருடைய நிழல் அது என்பது அவளுக்குப் புரியவில்லை. நெஞ்சு திக்குதிக்கென்று அடித்துக்கொண்டு மூச்சுத் திணறுகிறது. தன் அண்ணன்தான் ஒட்டுக் கேட்டுக்கொண்டு ஒளிந்து பார்த்துவிட்டானோ!" என்று நினைக்கும் போது அவள் நிற்கும் இடத்தோடு ஒரு சுற்று சுற்றியது.

மீண்டும் உள்ளே ஓடிவந்தாள். ஏதோ யோசனையில் ஈடுபட்டுக் கிடந்த தாமோதரனைப் பார்த்து, "மாமா! இத்தனை நேரம் நாம் எப்படி நம்மை மறந்து இன்பத்தில் ஆழ்ந்திருந்தோமோ அதற்கு நேர் மாறாக விபரீதமான ஆபத்து நம்மைச் சூழ்ந்துவிட்டது. யாரோ இதுவரையில் இவ்வறை வாசற்படி யருகில் நின்று நம்மைக் கவனித்திருக்கிறார்கள். நான் வெளியில் வந்ததும் பூனைபோல் நகர்ந்து சென்ற நிழலை நான் பார்த்தேன். அந்த நிழல் யாருடையதென்று தெரியவில்லை. எனக்கென்னவோ குடல் நடுங்குகிறது. பேராபத்து சூழ்ந்திருப்பதாய் மனத்திற்குள் ஏதோ ஒன்று சொல்கிறாப்போல் ஒரு தோற்றம் உண்டாகி வதைக்கிறது. மறுபடியும் நாம் சந்திப்போமா என்ற ஒரு பீதி என்னை யறியாது என் மனத்தைப் பிளக்கிறது. என்ன செய்வேன்?" என்று பதறியவாறு கூறினாள்.

இந்த பேரிடி போன்ற வார்த்தையைக்கேட்ட தாமோதரன் "என்ன! ஒட்டுக் கேட்டார்களா....ஸுதா!...ஸுதா!...ஏன் இப்படி உன் உடம்பு நடுங்குகிறது? அதெல்லாம் ஒன்றுமிருக்காது. நீ ஏதோ இருட்டைக் கண்டு பயந்து மருண்டுபோயிருக்கிறாய். உன் அண்ணன் சினிமாவுக்குப்போயிருக்கிறான் ஸுதா! இங்கு அவனில்லை. உங்கப்பாவும் அவர் நண்பர் வீட்டு விருந்துக்குப்போயிருக்கிறார். உன் பாட்டி கோயிலுக்குச் சென்றாள். ஆதலால் ஒருவருமே இருக்காது. வீண் பயம் வேண்டாம் ஸுதா! தைரியமாகப்

போம்மா...அக்கா தேடிக்கொண்டு வந்துவிடுவாள்'' என்று அன்பு கனியக் கூறினன்.

ஸுதா:—என்ன தைரியம் சொல்லியபோதிலும் என்னிதயம் படபடவென்று அடித்துக்கொள்கிறது. ஏதோ என்னை யறியாது பயமும் திகிலும் பாதிக்கிறது. ஆண்டவன் நம்மை என்ன செய்ய நினைத்திருக்கிருனே! நான் வருகிறேன்—என்று கூறியவாறு மெல்ல அப்படியும் இப்படியும் திரும்பிப் பார்த்தபடியே உடல் நடுங்க, மனம் பதைக்க மாடியிலிருந்து இறங்கி வந்தாள்.

தாமோதரன் கூறியபடியே அங்கு ஒருவரும் காணப்படவில்லை. நித்யாவையும் காணும். கங்காதரன் மட்டும் சமையல் அறைக்குப் பக்கத்தில் உட்கார்ந்தபடியே தூங்கிக்கொண்டிருந்தான். நேரே ஸ்வாமி பூஜையறைக்குச் சென்று மனங்குழைந்து கண்ணீர்முட்ட வேண்டினள். 'நான் செய்தது உன்பாத சாக்ஷியாகக் குற்றமென்று நினைக்கவில்லை. நீ கொடுத்த ப்ரேமை. நீ கொடுத்த உணர்ச்சி. நீ அளித்த அன்பின் சக்தி. இவைகளால் கட்டுண்டு மனத்தை உடைத்துச் சொல்லும்படி நீயே தூண்டினய். உன்னை யறியாது, உன்னருள் இல்லாது ஒரு துரும்பும் அசையாது. அதுபோல் நீ யறியாதது ஒன்றுமில்லை. என்னைக் காப்பாற்று. கைவிடாதே...காட்டிக் கொடுக்காதே...உன் மனது குளிர எங்களை நீ பிரிக்காமல் பிணைத்து ஆசீர்வதி. என் தாயே! என்னப்பனே!' என்று பிரார்த்தனை செய்தாள். பிறகு வெளியில் வந்து ரேடியோவிடம் உட்கார்ந்தாள். நித்யா ஈஸிசேரில் சாய்ந்தபடியே கண்ணயர்ந்துபோயிருப்பதைக் கண்டாள். ஒன்று மறியாதவள்போல் தன்னறைக்குப்போய் உட்கார்ந்தாள். மீண்டும் வீடுபூராவும் ஒரு சுற்று சுற்றிப் பார்த்தாள். தகப்பனரையும், அண்ணனையும் காணுததால் தாமோதரன் சொல்லியபடி நாம் ஏதோ மருண்டுதான் போய்விட்டோமோ என்று நினைத்து மீண்டும் உள்ளேவந்தாள்.

இவள் வரும் காலடிச் சத்தத்தைக் கேட்டதும் நித்யா சடக்கென்று விழித்துக்கொண்டு...."யாரு?...ஸுதாவா! எங்கிருந்து வரேம்மா? இத்தனை நாழி எங்கே போயிருந்தாய்? பாடம் கற்றுக் கொண்டாயிற்று! அப்பா வந்துவிட்டாரா?'' என்றாள்.

ஸுதா, தன் முகத்திலுள்ள மாறுதலை எவ்வளவோ ப்ரயாஸப்பட்டு மாற்றிக்கொண்டு..."அப்பா இன்னும் வரவில்லையம்மா! நான் அப்பவே பாடம் சொல்லிக்கொண்டாயிற்று. நீ தூங்குகிருயே என்று எழுப்பவில்லை. அப்பா எங்கே போயிருக்கிருர்?'' என்று ஒன்றுமே தெரியாதவள்போல் கேட்டாள்.

நித்:—எனக்குத் தெரியாதேம்மா! மணி 9 கூட அடிக்கப் போகிறதே. ஸினிமாவுக்குச் சென்ருரோ, என்னவோ! அண்ணனையும் காணவில்லை...நீயும் மாமாவும் சாப்பிடுங்கள் அவர்கள் வரட்டும்.

ஸுதா அதற்குமேல் பதிலே பேசவில்லை...கங்காதரனை எழுப்பினள். தாமோதரனும் அவளும் வாயே திறக்காமல் சாப்பிட்டு எழுந்து சென்றார்கள். ஒன்பதரை மணிக்குமேல் ஹரிஹரன் வந்தான். 'சாப்பாடு வேண்டாம். விருந்து சாப்பிட்டாயிற்று' என்று கூறி படுக்கச்சென்றான். நித்யா மட்டும் சாப்பிட்டதும் எல்லோருக்கும் பாலைக் கொடுத்துப் பின் படுக்கச்சென்றாள்.

இரவு வெகுநேரம் தூக்கமே கொள்ளாது புரண்டுபுரண்டு படுத்திருந்தாள். நடுநிசி எங்கும் இருள் சூழ்ந்து உலகமே நித்திரையில் ஆழ்ந்திருந்தது. ஹரிஹரனும் தூங்கவில்லை என்பதை நித்யா அவன் விடும் பெருமூச்சினலறிந்தாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஹரிஹரன் மெல்ல எழுந்துவந்து "நித்யா!" என்று மெல்லிய குரலில் கூப்பிட்டான். இச்செய்கை நித்யாவுக்கு வியப்பாயும் திடுக்கிடலாயுமிருந்தது. உடனே எழுந்து நின்று "என்?...இன்னும் தூங்கவில்லையா?...உடம்பு ஒன்றும் இல்லையே!" என்றாள்.

ஹரிஹரன், "உஸ்...பேசாமல் என் பின்னேடுவா!" என்று கூறி முன்னே நடந்தான். நித்யாவுக்கு ஒன்றுமே புரியாமல் திக்கு திக்கு என்று அடித்துக்கொண்டது. எங்கு அழைக்கிறாரோ என்று பயந்தபடியே பின்னல் சென்றாள். நேரே வீதிப்பக்கத்துத் தோட்டத்திற்குச் சென்று அங்குள்ள ஒரு ஆசனத்திலமர்ந்தான். நித்யா பக்கத்தில் நின்றாள்.

ஹரி:—நித்யா! அழகுக்கு ஆசைப்பட்டு நான் உன்னை மணந்தது மிகவும் மடத்தனம் என்பது இப்போதுதான் நன்றாகத்தெரிகிறது. ஒரே வார்த்தையில் சொல்கிறேன். நாளை பொழுதுவிடிவதற்குள் உன் தம்பியை நீயே வீட்டைவிட்டுத் துரத்தவேண்டும்...

நித்:—ஹா!...என் தம்பியையா...என்?...எதற்கு?...

ஹரி:—எதற்கா? உனக்கு துக்கம். எனக்கு வெட்கம். சண்டாளன்! உண்டவீட்டிற்கு இரண்டகம் நினைக்கும் பாவி. நம்பிக்கை துரோகி...பிண்டத்திற்கில்லாது திண்டாடுகிறதே என்று பச்சாத்தாபம், அதிலும் உன்பொருட்டு காட்டியதற்குப் பலன் கண்டுவிட்டேன். என் அன்னத்தையே புசித்து, என் வீட்டிலேயே கன்னம் வைக்கப்பார்க்கிறான். ஸுதாவுக்கு அவன் பாடம் சொல்லிக்கொடுப்பது பிசகு. வேண்டாம்; வேண்டாம் என்று முட்டிக்கொண்ட என் தாயார் வாக்கியத்தையும் நான் உனக்காகப் புறக்கணித்தேன். அதன் பலன் கைம்மேல் கிடைத்தது.

நித்:—ஐயோ! நீங்கள் சொல்வது ஒன்றுமே எனக்குப் புரியவில்லையே! உங்களுக்கு அவன் என்ன த்ரோகம் செய்தான்?

ஹரி:—நித்யா! நீ சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பவளாயின் நியாயத்திற்குப் பொதுவாகப் பேசு. என்ன த்ரோகம் செய்தானு! என் கண்மணி ஸுதாவை அப்படியே கபளீகரம்

செய்யப் பார்க்கிறான். வெட்கக்கேடு. என் சிநேகிதர் ஒருவர் என்னைக் கூப்பிடுவதற்காக வந்தாராம். ஒரு வேளை நான் மாடியி லிருப்பேனோ என்று மாடிக்குச் சென்றாராம். அங்கு உன் தம்பி ஸுதாவிடம் காதல் வார்த்தைகளாடிக் குலாவுவதைக் கண்டு மனந் துடித்தவாறு வந்து அப்பொழுதே என்னிடம் சொன்னார். எனக்கு மானம் போகிறது. பிச்சைக்கார நாயிக்கு இந்த லீலைகளும் மோச மும் வேறேயா! கலெக்டர் கபாலீச்வரருடைய மகன் ஐ. ஸி. எஸ். படித்துள்ள ஆதிமூர்த்திக்கு நான் ஸுதாவைக் கொடுக்க ஏற்பாடு செய்கையில் பச்சைக் குழந்தை அவள் மனத்தைக் கலைத்து இப் படுபாவி ஸரஸம் பேசுவதைக் காணச் சகிக்குமா?...

நித்யா ஒன்றுமே தோன்றாது இடிந்துபோய் பதில் பேசவும் தெரியாது திகைத்து "உண்மையாகவா?...என்றுமட்டும் கேட்டாள்.

ஹரி:—உண்மையில்லை....பொய்யானது...இன்னும் நம்பிக்கை இல்லையா? நான் பொய்யன் என்று நினைப்பா! இந்த அவமானத்தை என்னால் சகிக்கமுடியாது. நாளை பொழுது விடிவதற்குள் அவனை நீ வீட்டைவிட்டுத் துரத்தினால் போயிற்று. இல்லையேல் பிறகு என்ன நடக்குமென்று தெரியாது. எனக்கு வந்த ஆத்திரத்தில் நான் வந்த வுடனே அவனைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளியிருப்பேன். ஆனால் வீண் ரஸாபாஸமாய் ஊர் சிரிக்கவேண்டாம். இரண்டாம்பேர் அறி யாது போகட்டும் என்றும் உனக்கு அதிக வருத்தம் கொடுக்கக் கூடாது என்றும் பேசாதிருந்தேன். தெரியுமா! அந்தப் படவாப்பயல் முகத்தில் இனி விழிக்கமாட்டேன். காலை விடிவதற்குள் நீ இதைச் செய்தே தீரவேண்டும். ஜாக்ரதை" என்று உத்திரவு போட்டான்.

நித்யாவின் குடல் நடுங்கியது. 'இப்படிக்கூட தாமோதரன் செய்திருப்பானா! இது உண்மையானதா!... அவர்களிடையில் ப்ரேமை இவ்வளவு தூரம் வளர்ந்துவிட்டதா?...அடாடா!... என்ன காலக் கொடுமை!...உம். ஒரு ஏழைப் பெண்ணை மணக்க செல்வவந்தன் முன்வரலாம். ஆனால் செல்வவந்தன் பெண்ணை ஏழை காதலிப்பது அக்ரமம்...அநியாயம். அவமானம்...எல்லாம் சூழ்ந்து விடும்போலிருக்கிறது....உம்....விதி. என்னதான் நான் பாடு பட் டாலும் அதையும் பகவான் சோதிக்கிறான். இருக்கட்டும். இன்னும் என்னென்னதான் செய்கிறானோ பார்க்கலாம்' என்று மனத்திற்குள் குமுறியபடியே கண்ணீர்முட்ட நின்றாள்.

பிறகு தழதழத்த குரலில் "இது உண்மையா என்று பார்க் காமலேயே ஒரு பெரிய காரியத்தைச் செய்து விடுவதா! அப்படி இருந்தாலும்கூட அதைக் கண்டித்துத் திருத்தக்கூடாதா! இந்த ஒரு முறை எனக்காக மன்னிக்கமாட்டீர்களா! அவனையும் இப்படி அநாதரவாய் அனுப்பிவிட்டால் அவர்கள் எப்படி பிழைக்கமுடியும்? உங்களுக்கு அவன் குற்றவாளி என்று தோன்றினாலும் தயை காட்டி க்ஷமிக்கக் கூடாதா?" என்று இறைஞ்சியகுரலில்கேட்டாள்.

ஹரி:—(அதிக ஆத்திரத்துடன் பேசத்தொடங்கி) நித்யா! உன்னுடைய பக்ஷபாதம் இப்போது நன்றாகத் தெரிகிறது. இதே மனிதன் உன்னுடைய தம்பியாக இல்லாது வேறு மனிதனாக விருப்பின் நீ சும்மா இருப்பாயா! அவன் குடலைப் பிடுங்கிவிடவேண்டுமென்று கூறுவாயல்லவா! உன் தம்பியாகவிருப்பதனால் குற்றங்கூடத் தெரியாது போகிறது போலும். உனக்காக நான் சற்று பொறுமையை இழக்காதிருக்கிறேன். தெரியுமா? அஷ்ட தரித்திரன் அதிலும் குருடனின் மகன்; அதிலும் சோற்றுக்கும் வழியற்று என் காலடியிலேயே நாய்போல் பிண்டத்திற்குக் காத்திருக்கும் பன்னாடை செய்த செய்கைக்கு தயை காட்டுவதா? நீ மனந் துணிந்து கேட்பது என் நெஞ்சைப் பிளக்கிறது. நீ இதுபோன்ற குற்றங்களை உன்னருமையான தயாநிதியைக் கொட்டிக் காத்து விடுவாய் பாவம்!...நித்யா!...இந்த வீண் பசப்புகளுக்கு இந்த ஹரிஹரன் மசிகிறவனல்ல. உன்னுடைய உபதேசமும், பாரபக்ஷமும் எனக்கு வேண்டாம். 'வெட்டு ஒன்று; துண்டு இரண்டு' அவ்வளவுதான். விடியற்காலை நான் அவன் முகத்தைப் பார்க்கக்கூடாது. தெரிந்ததா?...

நித்யாவின் துக்கம் உச்சத்தை எட்டியது. குருடனின் மகன்... இந்தவார்த்தை அவளுடைய இதயத்தில் ஆயிரம் வாள்கொண்டறுப்பதுபோன்ற வேதனை செய்தது. அவளைமீறிய தைரியம் எப்படியோ ஒரு க்ஷணம் அவள் இதயத்தில் கடும் வேகமாய் மின்வெட்டுப் போல் பாய்ந்தது..."ஆம்...உலகத்தின் காலவினோதங்களையும் கலியின் கூற்றையும் நன்கறிவதற்கு நிதர்சனம் உங்களைப்போன்ற புண்ணியவான்கள்தான் கண் முன்பு சாக்ஷியாகிறது. தரித்திரம். குருடனின் மகள். சோற்றுக்கு வழியற்றப் பன்னாடை...முற்றும் சேர்ந்த என்னைத் தாங்கள் மணக்கும்போது ஒருவிதமான ஆபத்தோ, அவமானமோ ஒன்றுமில்லை. அதே நிலைமையிலுள்ள பிள்ளையை உங்கள் மகள் மணக்கும்போதுதான் இத்தனை அலங்கோலங்களும் வந்துவிடுகிறதா?" என்று கேட்டாள்.

ஹரிஹரன் இதைக்கேட்டதுமே மனித சுபாவமே மாறி சாக்ஷாத் ஹிரண்யனாகவே ஆய்விட்டான். "ஆஹ்ஹா...மூதேவி! என்ன சொன்னாய்? உன்னை நான் மணந்த மண்டைக் கொழுப்புதான் உன்னை இப்படி எதிர்த்துப் பேசச் செய்திருக்கிறது. நன்றி கெட்டவளே! சரிக்கு சரி சம்மந்தம் செய்யாததின் விபரீதத்தை உன் மூலம் நன்றாகத் தெரிந்துகொண்டேன். தரித்திரத்தில் ஊறிய தனல்தான் உனக்கு இந்த செல்வத்தில் பழகியும் உன் அல்ப புத்தி போகவில்லை. மறு பேச்சின்றி என் கட்டளையை நிறைவேற்றுகிறாயா! உன் கண்முன்பு அந்த த்ரோகியைக் கழுத்தைப் பிடித்துத் தூரத்தட்டுமா?" என்று கர்ஜனை செய்தான்.

ஒரு அடிமையினும் அடிமையைப்போல் தன்னை நினைத்துப் பேசுவதைக் கேட்க நித்யாவுக்கு மனம் முறிந்துபோயிற்று. அவ

ளுடைய நிலைமையில் இப்படியே தன்னுடைய உயிர் நீங்கிவிடக் கூடாதா! என்று தோன்றுவதைவிட வேறு ஒன்றுமே புரியவில்லை. அவளைச் சித்திரவதை செய்தது...."ஏதோ! புத்தியில்லாமல் சொல்லி விட்டேன். க்ஷமிக்கவேண்டும். நானும் ஒரு மனுஷி. எனக்கும் ஓரளவு சுதந்திரம் உண்டு என்ற மூடநம்பிக்கையால் மதியிழந்தேன். நான்சாக்கடைப்புழுகிற்கும்கேவலமானவளென்பதைஉணர்ந்தேன். இனி இம்மாதிரியொன்றும் நடக்காது என்பதை நம்புங்கள்...என்று கண்ணீர் வழிந்தபடியே தடதடவென்று தன்னறைக்குப்போனுள்.

தாங்கமாட்டாத துக்கம் தொண்டையை அழுத்தியதால் அவளால் சகிக்கவே முடியவில்லை. மனக்கொந்தளிப்பு அடங்க தன்னை மறந்துப் புலம்பிக் கதறினுள். எத்தனை நாழிகை இப்படிப் புலம்பினும் என்பது அவளுக்கே தெரியவில்லை. அப்போது நேரத்தை அறிவிக்க முன்வந்ததுபோல் கடியாரத்தில் மூன்று மணி டாங்டாங் கென்று அடித்ததுகண்டு அலறியவாறு எழுந்தாள்.

"தானே அவனை ஆதரித்து முன்னுக்குக் கொண்டுவருவதாகக் கொடுத்த வாக்கை அவர் மறந்து இத்தகைய கடுமையான உத்திரவைப் போட்டபிறகு இனி அவன் 5 நிமிஷங்கூட இங்கிருப்பது தகாது. அவன் தலையெழுத்துப்படி திண்டாடட்டும். அல்லது கூண்டோடு கைலாசமாகச் சாகட்டும்" என்று மனத்தை முறித்துக் கொண்டு எழுந்து மாடிக்குச்சென்றுள்.

அங்கு தாமோதரன் அறையில் அவனைக்காணுது வெறும் கந்தல் பாய்மட்டும் கிடந்ததுகண்டு திடுக்கிட்டவளாய் சுற்றுமுற்றும் பார்த்தாள். வெளி மாடியில் பார்த்தாள். எங்கும் காணுததால் ஏற்கெனவே உடைந்த அவளுடைய இதயம் சுக்கல் நூறுக உடைந்து சிதறியது. தலை சுழன்றது. துவண்டுபோய் சுவற்றில் சாய்ந்தாள். கண்ணீர் வெள்ளம் பெருகிக்கொண்டேயிருந்தது.

54-வது நாவல் **புகழ்மாலை** 2-வது பதிப்பு

டாக்டர் ரமா பரிசுத்தமான இதயத்தையுடைய தருணீமணி. பிறர் துயராற்றுதலையே தன் சொந்தப் பணியாகக்கொண்டு உள்ளும் புறமும் ஒத்துழைக்கிருள். புகழ் சிகரத்தை எட்டியது. அதன் வளர்ச்சி பொருமை ஜ்வாலையாக தேவராஜனுக்கு மாறும் விநோதத்தால் எத்தனை தடுமாற்றம்! சோதனை! விசித்திரம்! வாழ்க்கையில் எத்தனை பூகம்பங்கள்! பொறுமைக்கு வெற்றியா? பொருமைக்கு வெற்றியா?...7 அழகிய படங்களுடன் கூடியது. விலை ரூ 1-4-0.

உதயமாகி நான்கு நாழிகைக்குமேலாகியும் அன்று வீடு களை யாகவே இல்லை. ஸுதா எழுந்து வழக்கம்போல் பாடம் எழுதிக்கொண்டிருந்தாள். ஆனால் அவள் முகத்தில் தேங்கிக் கிடக்கும் சோகத்தைமட்டும் அவளால் மறைக்கவே முடியவில்லை. ஒவ்வொருவரும் ஒண்டாது தனித்தனியே இருந்தார்களேயன்றி வீட்டில் கலகலப்பு என்பதே மறைந்திருந்தது.

நித்யா மட்டும் தன் வேலைகளை ஒரு எந்திரம்போல் செய்து விட்டுப் பேசாமல் படுத்திருந்தாள். ஹரிஹரனும் ஏன் என்று கேட்க வில்லை. ஸுதாவும் முன்போல் நித்யாவிடம் வந்து ஒன்றும் கேட்க வில்லை. தத்தாரி யாதவ் இரவு வரவில்லை. காலை வந்தபிறகு அவ னுடைய அருமையான பிரண்டைப்பாட்டி, "அடேய்! யாதவ்! இங்கு வாடா! ஒரு நல்ல செய்தி சொல்கிறேன்...அந்த பிச்சைக் காரப்பயலை காணும். எங்கு போயிற்றோ தெரியவில்லை. வீட்டில் ஏதாவது சப்தமிருக்கிறதா பாரு. ஏதோ குடிமுழுகிப் போய்விட் டாற்போல் அந்த நீலி எழுந்திருக்கவே இல்லை. படுத்துப் புலம்பு கிருள். வெளியில் சொன்னால் வெட்கக்கேடு. நானும் நீயும் சந்தே கித்தபடியே ஸுதாவின் பவிஷை உன் அப்பாவே நேரில் பார்த்து விட்டானும். அவன்தான் ஏதோ சாவி முடுக்கிவிட்டான்போல் தெரிகிறது."

என்பதைக் கேட்டதும் யாதவ் ஒரு குதி குதித்தவாறு, "அப் பாடா! இந்த பீடையும் ஒழிந்ததா! சனியன்பிடித்த பெண்ணுக்கு இனியாவது புத்தி வருமா! அதன் கொட்டமும் திமிரும் அடங்குமா! பாட்டீ! இன்னொரு விஷயம் கேட்டயா! வெளியில் தலைகாட்ட ஆசையில்லை. 'என்னடா! தரித்திரநாராயணன் மாப்பிள்ளையாகப் போகிறானமே! இதென்னடா வெட்கக்கேடு?' என்று என்னைக் கேட்கவாரம்பித்தார்கள். எனக்கு வந்த ஆத்திரத்தில் அந்த தடியனை சக்கையாய் அடித்துவிட எண்ணினேன். ஏதோ, நல்லகாலம் தொலைந்துவிட்டான்" என்று ஆரவாரத்துடன் கூறியதை நித்யாவும் ஸுதாவும் தம்தம் அறையிலிருந்தபடியே கேட்டு மனம் குழம்பி னார்கள். ஸுதா நெருப்பின்மீது புழுவெனத் துடித்து அப் படியே சாய்ந்தாள்.

தாமோதரனைத் தேடிச்சென்ற நித்யா அங்கு அவனைக் காணாது திடுக்கிட்டாள் என்று முன்பு சொன்னோமல்லவா! அவனைத் தேடியலைந்து பின், மனத்தில் பலவிதமான திகிலுடன் கீழே இறங்கி வந்தாள். ஒருநாளும் தாமோதரன் இம்மாதிரி சொல் லாது போனதில்லையாதலால் ஏதோ விபரீதத்திற்குத்தான் வெளியே போயிருக்கிறான். எங்கேனும் ஓடிவிட்டானோ தற்கொலை செய்து கொண்டானோ! என்ற பயம் வாட்டுகிறது.

இதே வேதனையுடன் மீண்டும் தன்னறையில் வந்து படுத்தாள். இவள் படுக்கையில் ஒரு கடிதம் கிடக்கக்கண்டு ப்ரமிப்புடன் அதை எடுத்துப் படிக்கவாரம்பித்தாள். விழிகள் பொழியும் மழையை அவளால் தடுக்கமுடியவில்லை.

"அக்கா! நமஸ்காரம்.

மகா பாவி எங்கள் பொருட்டு நீ உன் யௌவன வாழ்க்கையையே த்யாகம் செய்ததற்கு நீ கண்ட பலன் இதுதான். தெய்வச் செயலாய் உதித்த இந்த ப்ரேமைக்கு அந்த ஆண்டவனேதான் ஜவாப்தாரி. அதற்கு இத்தகைய கடின தண்டனைக்கு நீ இலக்காக நேர்ந்ததைப் பார்க்க என் மனம் துடிக்கிறது. நான் போகிறேன். இன்னும் வீண் உபத்திரவம் என்னால் உனக்கும் ஸுதாவுக்கும் வேண்டாம். என்னைப்பற்றி இனி கவலைப் படவேண்டாம். ஸுதாவை நீதான் தேற்றிக் காக்கவேண்டும். நான் பண்ண பாவத்தின் வேகந்தான் இப்படியெல்லாம் ஆட்டுகிறது.

உன் அன்புள்ள,
தாமோதரன்."

இதைப் பலதரம் படித்து மேஜைமீதே போட்டாள். "இதயபூர்வமாக உதிக்கும் ப்ரேமைக்கு தண்டனை. அக்ரமமாக அலைபவனுக்குத் தண்டனையே இல்லை. இதுவா உலக தர்மம்! இதுவா நியாயம்!" என்று மனத்திற்குள் விம்மினாள். "எங்கேனும் சென்று தற்கொலை செய்துகொண்டானோ?" என்று நினைக்கும்போது அவள் அப்படியே தீயின் மத்தியில் நிற்பதுபோல் தோன்றியது. அவனைச் சிறிய பிராயம் முதல் தான் அன்பு செலுத்தி வளர்த்த மகிமையை எண்ணியெண்ணி பெருமூச்சு விட்டாள். தான் ஏன் இந்த பாழும் உலகத்திலிருக்கவேண்டும். தற்கொலை புரிந்துகொண்டால்தான் என்ன என்றுகூட ஒரு நிமிடம் துணிந்தாள்.

"உம். இந்த உயிர்கூட எனக்குச் சொந்தமேது? இதுகூட எனக்குப் பராதீனந்தானே!"...என்று எண்ணி விசனித்தபடியே படுத்திருக்கையில்தான் மேற்குறித்த வார்த்தைகள் காதில் கேட்டன. மனது பின்னும் துடிதுடிக்கத் துவண்டுபோனாள். 'ஈச்வரோ ரக்ஷது' என்று நினைப்பதைத் தவிர வேறு என்ன செய்யக்கூடும்? கட்டைபோல் கிடந்தாள்.

மேஜைமீது கிடந்த கடிதத்தை தற்செயலாக வந்த ஹரிஹரன் படித்துப் பார்த்துவிட்டு எவ்விதமான வார்த்தையும் சொல்லாமல் கடிதத்தையும் தானே எடுத்துக்கொண்டு போனான். ஸுதாவுக்கு இந்த மன அதிர்ச்சி தாங்காமல் மண்டையிடியும் ஜுரமும் வந்துவிட்டன. அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் வழக்கம்போல் பள்ளிக்கூடம் போனாள்.

கார் அப்போது ரிப்பேரிலிருந்ததால் ஸுதா ரிக்ஷாவில் சென்ருள். பள்ளிக்கூடத்தில் படிக்கவும்முடியாமல் தத்தளித்தாள். உபாத்தியாயினி இவளுடைய நிலையை அறிந்துகொண்டு வீட்டுக்கு அனுப்பினுள். ஆலாமைசோலாமையாய், அவள் வீட்டுக்கு வந்து தன் அறையில் படுத்தாள். அவள் வந்ததை நித்யா பார்க்கவில்லையாதலால் கவலை தோய்ந்த முகத்துடன் தன்னறையிலேயே படுத்திருந்தாள்.

தர்மு பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் ஸுதா படுத்திருப்பதைப் பார்த்துவிட்டு நித்யாவிடம் ஓடிவந்து, "அம்மா! இன்னிக்கு அக்கா ஏன் பள்ளிக்கூடம் போகல்லே? உடம்பு நெருப்பாகக் காய்கிறது. படுத்திருக்கிருளே" என்ருள்.

இதைக்கேட்ட நித்யாவுக்கு மனது கேட்கவில்லை. ஸுதாவிடம் ஓடினுள். உடம்பை தொட்டுப் பார்ப்பதுகூட அவளுக்குத் தெரியவில்லை. "ஸுதா!...ஸுதா! என்னம்மா உடம்பு! நீ எப்போது வந்தாய்? எனக்குத் தெரியவே தெரியாதே" என்று கனிந்த அன்புடன் கேட்டாள்.

கண்ணை மூடிக்கொண்டு படுத்திருந்த ஸுதா நித்யாவின் குரலைக்கேட்டதும் திடுக்கிட்டு எழுந்து, நித்யாவை அப்படியே சேர்த்துக் கட்டிக்கொண்டு, சிறு குழந்தையைப்போல் தேம்பித் தேம்பி அழவாரம்பித்தாள். இதுகண்ட நித்யாவின் உள்ளம் உருகியது. "ஸுதா! அழாதேம்மா!" என்ற வார்த்தைக்குமேல் அவள் வாயிலிருந்து ஒன்றுமே வரமுடியவில்லை. அவளும் கண்ணீர்விட்டவாறு சிறிது நேரம் வாய்திறக்காதிருந்தாள்.

ஸுதா:—(சற்று சமாளித்துக்கொண்டு) அம்மா! என்னை மன்னிப்பீர்களா!...என்னுல்தானே உங்களுக்கும் மாமாவுக்கும் இத்தனை கஷ்டம் உண்டாகியது...அம்மா! ஈச்வர சாக்ஷியாக நடந்த இச்சம்பவத்திற்கு நான் ஜவாப்தாரியா!...அம்மா!...அம்மா!...என்னை மன்னியுங்கள். என்னை மன்னித்துவிடுங்கள்—என்று கதறினுள்.

நித்:—கண்ணே! கதருதே. விதியின் விளையாட்டில் சிக்கிய நம்மை அது ஆட்டித்தானே விடும். வீணுக உடம்பை அலட்டிக்கொள்ளாதே. ஸுதா! என்னவிருந்தாலும் நீ ஒரு பெரிய டெபுட்டி கலெக்டரின் மகள். அவனே பரம தரித்திரன். உன்னுடைய மனத்தை நீயும் இப்படித் தளரவிட்டிருக்கக்கூடாது; அவனும் தன்னைமீறிய இடத்தில் பிரியம் வைத்திருக்கக்கூடாது. இரண்டு பேரும் கட்டுமீறியது பிசகுதானே! ஏன் அதற்கு தண்டிக்கக்கூடாது? உங்கப்பா அவனை இம்மட்டும்விட்டதே பெரிய அதிசயமல்லவா! எல்லாவற்றிற்கும் காரணம் நானேயன்றி வேறு யாருமில்லை. என்னுடைய பாவந்தான் இது. இந்தா! இந்த மாத்திரையைச் சாப்பிடு. தலைவலியும் ஜுரமும் குறைந்துபோகும்—என்று கூறி மாத்திரையைக் கொடுத்துவிட்டுப் போனுள்.

அம்மாதிரி சென்றதன் நோக்கம் ஸுதாவின் நினைவை மாற்ற வேண்டும் என்பதேயாகும். ஆனால் விதி எப்போதும் நன்மையைத் தீமையாக்குவதுதானே சகஜம். பிரண்டைபாட்டிக்கு விஷயம் விளங்கியபிறகு சும்மா இருப்பாளா! அவளுடைய அதிகாரக் கொடியை சரியானபடி நாட்டினாள். எப்படியாவது தன் தம்பிக்கு ஸுதாவைக் கல்யாணம் செய்துவிட வேண்டுமென்றும் பணத்தைச் சுரண்டிக்கொள்ளவேண்டுமென்றும் நித்யாவே இந்த சூழ்ச்சி செய்து ஸுதாவின் மனத்தைக் கெடுத்து விட்டாளென்று தீர்மானமாய் முடிவு செய்தாள். நித்யா இப்போது ஸுதாவுடன் பேசியதைக்கூட ஸுதாவுக்குக் கலகம் செய்து உடம்பு என்று வேஷம் போடும்படித் தூண்டிவிட்டிருப்பதாக ஒரு கற்பனைசெய்து கொண்டு அதற்கே அங்கங்கள் சிருஷ்டி செய்யத்தொடங்கினாள்.

சாயங்காலம் ஹரிஹரன் ஆபீஸிலிருந்து வந்ததும் வராததும் அவன் சொக்காயைக் கழட்டுவதற்குள் "ஏண்டா! நாடகங்களெல்லாம் தடபுடலாக நடக்கிறதே தெரியுமா! நான் அப்போதெல்லாம் முட்டிக்கொண்டதைக் கேட்காமல் வியாதியை வளரவிடுவதுபோல் விட்டு இத்தனை தூரத்திற்குக் கொண்டுவந்தாய். அந்த சிறுக்கி இன்னும் ஏதேதோ தூபம் போட்டு அந்த பச்சைக்குழந்தையின் மனத்தைக்கலைத்து அவளைப் பள்ளிக்கூடம் போகவேண்டாமென்று தடுத்து 'ஜுரம், குளுரு' என்று படுத்து நாடகம் நடிக்கும்படிச் செய்திருக்கிறாள். அந்த அசடும் அப்படியே படுத்திருக்கிறது. நீ இந்த பெண்ணை கூடிய சீக்கிரத்தில் அவளிடமிருந்து பிரித்து ஆஸ்டலில் படிக்க அனுப்பினால்தான் மானத்தோடு வாழலாம். இல்லாவிட்டால் அந்த மகராஜி இதை உருப்படவிடமாட்டாள். ஆகையால் ரோஜாபுரத்தில் ஏதோ பெரிய ஹாஸ்டலும், பள்ளிக்கூடமும் இருப்பதாகத் தெரிவித்தாயே, அங்கு அனுப்பிவிடு. புத்தி மாறட்டும்" என்று உபதேசம் செய்தாள்.

இந்த உபதேசத்தை உண்மை என்று நம்பிய ஹரிஹரன் ஸுதா படுத்திருப்பதை கவனியாது அவளை வாய்க்கு வந்தபடி திட்டிவிட்டு போனான். இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த நித்யாவுக்கு எப்படித்தானிருக்கும்? நெருப்பின்மீது புழுகெனத் துடித்தாள். "இத்தகைய அல்லல்படுவதற்காகவா நான் இந்த கிழவரை மணந்தேன். என் எதிர்பார்ப்பெல்லாம் பகற்கனவாகவா முடிந்தது. நான் நினைத்துச் செய்ததொன்று, பகவான் நினைத்து நடத்துவதொன்றா? ஐயோ! இந்த அடாப்பழியை என்னால் சகிக்க முடியவில்லையே!" என்று அவளையும் மீறி வாய்விட்டு கூறிக் கலங்கினாள். தேகமே துவண்டது.

"யாரு! தாமோதரனு! எண்டாப்பா இப்படி அலையக் குலைய இந்த ராத்திரியில் வந்திருக்கிறயே! என்ன விசேஷம்? அக்கா, அத்திம்பேர், குழந்தைகள் எல்லோரும் சவுக்யமா! பாட்டி சவுக்யமா?" என்று அடுக்கடுக்காய் ஞானம் விசாரித்தாள்.

தாமோதரனுல் பதில்பேசவேமுடியாமல் சற்றுநேரம் தவியாய் தவித்தான். அந்தகனின் இதயமும் துடித்தது. "தாமூ! அத்திம்பேர் சவுக்யமா!" என்றுன். தாமோதரன் சற்று சமாளித்துக் கொண்டு "எல்லோரும் சவுக்யம். ஒருவருக்கும் உடம்பு ஒன்றுமில்லே. நம்முடைய பாவ நிழல் அடித்து விரட்டிவிட்டது. என்னே அங்கிருக்கக்கூடாதென்று துரத்திவிட்டார்" என்று கூறும்போது துக்கம் பொங்கி வந்தது.

அந்தகன் அலறியபடியே, "என்ன! என்ன! உன்னேயுமா துரத்திவிட்டார்கள்? ஐயோ! நம்பிக்கை த்ரோகமே! என்ன காரணம் காட்டித் துரத்திஞர்கள்?" என்றுன். இந்த கேள்விக்குப் பதில் சொல்ல தாமோதரன் சற்று தியங்கினுன். உண்மையை ஒளிக்கவும் கூசுகிறது. சொல்லவும் மனது துணியாது நடுங்குகிறது. த்ருசங்கு ச்வர்க்கத்தில் தத்தளித்தான்.

ஞானு:—எண்டாப்பா! உன்னே வெறுமை துரத்திஞர்களா? ஏதேனும் பழியைப் போட்டுத் துரத்திஞர்களா! பயப்படாமல் சொல்லப்பா!

தாமோ:—அம்மா! நான் சுதாவுக்குப் பாடம் கற்றுக்கொடுப்பது பெருங் குற்றமாம். அதனுல் பெரிய அபராதியாகிவிட்டேனும். நான் வீட்டிலிருக்கும்வரையில் விடு விடியாதாம். யாதவனுக்குக் கல்யாணமாகாதாம். சுதா கெட்டுவிடுவாளாம். இன்னும் ஏதேதோ சொல்கிறுர்கள். நமக்காக அக்கா மகத்தான த்யாகம் செய்தும் நம்முடைய பாவம் அவளேயே வாட்டுகிறது. நம்மால் இன்னும் ஏன் கஷ்டப்படவேண்டும் என்று வந்துவிட்டேன்.

இதைக்கேட்ட மூர்த்திக்கு ஆத்திரம் பீறிக்கொண்டு வந்தது. 'ஹா! இதுவா நியாயம்? கொடுத்த வாக்கை முறிப்பதா பெரிய மனிதருக்கு அழகு? அடாடா! நான் அநியாயமென்றும் மோசமென்றும் அறியாமல் அந்த மனிதனின் வார்த்தையை நம்பி ஏமாந்தேனே! ஐயோ! என் நித்யாவின் எண்ணமெல்லாம் இப்படியா சிதறிப்போகவேண்டும்? இருக்கட்டும். ஞானம்! எது எப்படியிருப்பினும் சரி. தலேக்குமேல் போன வெள்ளம் ஜாணுனல் என்ன! முழம்போனல்தான் என்ன! நாலு பெரிய மனிதர்களே வைத்துக் கொண்டு அவனே பஜீத் செய்யாது விடுவதில்லே. தாமூ! என்னே அழைத்துக்கொண்டு போ! கிளம்பு!" என்று உத்திரியத்தை இழுத்துக் கட்டிக்கொண்டு ஆத்திரத்துடன் எழுந்தான்.

தாமோதரனுக்குத் திகில் பிடித்துக்கொண்டது. பெரிய விபரீதந்தான் நடந்துவிடும் என்று அவன் மனத்தில் ஏதோ கூறி பயமுறுத்தியது. எத்தனைதான் ஞானமும் அவனும் சமாதானம் சொல்லியும் மூர்த்தி கேட்கவே இல்லை. இதனால் தனக்கு எத்தகைய ஆபத்து வந்தாலும் சரி விடப்போவதில்லை என்று முரட்டுப் பிடிவாதம் செய்துகொண்டு தட்டித் தடுமாறி வீதிக்கே ஓடினான்.

தாமோதரன் பின்னாலேயே ஓடி அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு "அப்பா! வேண்டாம். நம்மால் அக்காவுக்கு இன்னும் அதிக துன்பமும் ஆபத்தும் வேண்டாம். பேசாமல் வாருங்கள்" என்று இழுத்தான்.

மூர்:—நீ வரவில்லையென்றால் நான் இன்னும் யாரையாவது அழைத்துக்கொண்டு கட்டாயம் போயே தீருவேன். இப்பேர்ப்பட்ட மனிதர்களை விட்டுவிட்டால் கொழுப்பு அதிகரித்துத்தான் போகும். நீ வரவேண்டாம். பாலு! நீ சற்று என்னை அழைத்துச் செல்லு. என் வயிறு எரிகிறது. என்னால் தாங்க முடியவில்லை. என் கிளியை வளர்த்து அந்த புத்தியில்லாத புலியிடம் கொடுத்ததற்கு நான் கண்ட பலன் இதுதான்போலும். வா! வாப்பா! என்னோடு வா! நீயும் என்னைக் குருடன் என்று அலக்ஷியம் செய்கிறாயா!.... என்று படபடத்துக் கூறினான்.

அந்த வீட்டிலிருக்கும் ஒரு பெரியவர் திருமூர்த்தியின் பரிதாபத்தைக் கண்டு மனம் தவித்தவராய் "மூர்த்தி! இந்த சின்னப் பசங்களை நீ கெஞ்சவேவேண்டாம். நீ சொல்வதுபோல் அந்த நாணயங்கெட்டவனை ஒரு உலுக்குஉலுக்கிவிட்டுத்தான் வரவேண்டும். நான் உனக்குத் துணை வருகிறேன். வா! கிளம்பு" என்றார்.

அவ்வளவுதான். மூர்த்திக்கு எங்கிருந்தோ, ஒருவிதமான தெம்பும் பலமும் உண்டாயின. அப்படியே கிளம்பிவிட்டான். ரயில்வே ஸ்டேஷனில் பட்டினியாக மணிக்கணக்கில் காத்திருந்து பின் வண்டி ஏறினார்கள்.

மறுநாள் காலை பத்து மணி சுமாருக்கு அவ்வூர் வந்து சேர்ந்து நேரே நித்தியாவின் பங்களாவுக்குச் சென்றார்கள். வீதி முதல் கேட்டிலிருந்து பங்களாவின் கட்டிடம் உள்ள இடம் சற்று தூரத்திலிருப்பதால் கேட்டிலிருந்து இவர்கள் உள்ளே வரும்போது தற்செயலாக உள்ளிருந்து வந்த நித்யா பார்த்து தீயை மிதித்தவள் போல் துள்ளினாள். "ஐயோ! இவர் எதற்காக வரவேண்டும்? பட்ட அவமானமெல்லாம் போதாதா? இன்னும் என்ன பாக்கி இருக்கிறதென்று வருகிறாரோ தெரியவில்லையே! தாமோதரன் வீட்டை விட்டுப்போன செய்தி தெரியுமோ தெரியாதோ! அவன் சென்று மூன்று நாட்களாகியும் தகவலே தெரியவில்லையே. நான் என்ன செய்வேன்?" என்று தவிக்கிறாள்.

முன்பக்கத்து ஹாலில் உத்யோகஸ்தர்கள் சிலர் உட்கார்ந்திருப்பதால் இவள் வெளியில் வந்து அவரை அனுப்பவும் முடியாது தர்ம சங்கடமாகியது. தன் கணவன் அவரைப் பார்த்துவிட்டால் இத்தனை பேர்களின் எதிரில் என்ன நடந்துவிடுமோ என்று நினைக்கும்போது தேகம் நடுங்கியது.

மூர்த்தியோ வந்துகொண்டே இருக்கிறான். நித்யாவின் மனம் தாமரையிலை நீரைப்போல் தத்தளிக்கின்றது. ஓட்டமாக சுதா படுத்திருக்கும் அறைக்கு ஓடி, "ஸுதா! ஸுதா!...ஐயோ! என்ன செய்வேன்? பட்ட அவமானமும், கஷ்டமும் போதாதென்று இன்னும்படுவதற்கு அப்பாவே வந்திருக்கிறாரே! கொஞ்சம் எழுந்திரேன். உங்கப்பா பார்ப்பதற்குமுன்பு அவரைப் போய்விடச் சொல்லேன்" என்று கண்ணீர்வழியப் பரிதாபமாகக் கூறினாள்.

ஸுதா அலறியடித்துக்கொண்டு எழுந்து "ஏம்மா அழுகிறாய்! தாதாவா வந்திருக்கிறார்! வரட்டுமே! அப்பா என்ன செய்துவிடுவார் தலையையா வாங்கிவிடுவார்? வந்து பலபேர் எதிரில் அப்பா செய்த அக்ரமத்தைஎடுத்துச்சொல்லட்டுமே!"என்றுபடபடத்துக்கூறினாள்.

நித்:—அம்மா! 'இளங்கன்று பயமறியாது' என்றபடி நீ பேசுகிறாய்! உங்கப்பாவை நம்பி அந்த அந்தகரின் குடும்பம் பாழானதோடு போதும். இனியும் விபரீதத்திற்கு இடம் தேடவேண்டாம். உங்கப்பாவின் குணந்தான் நன்றாகத் தெரிந்துவிட்டது. அவருக்காக யார் யாரோ காத்திருக்கிறார்கள். அவர் வரும் நேரமாகிவிட்டது. நீ போய் அவரைப் போகச் சொல்லு தாமதம் செய்யாதே. ஸுதா! என் மனம் பதைக்கின்றது. வீணில் உங்கப்பாவின் கவுரவத்தைக் குலைப்பதில் லாபமென்ன? என் விதி. அந்தகரின் விதி...நான் அவரைப் பார்க்கவில்லை. போகச்சொல்லு...என்றாள்.

உடனே ஸுதா கூந்தலையும், உடையையும் சீர்படுத்திக்கொண்டு வாசலுக்கு ஓடிவந்தாள். மூர்த்தியை ஒருவர் தடியைப் பிடித்து அழைத்து வந்துகொண்டிருந்தார். சுதா எதிரில் சென்றாளேயன்றி அவளால் பேசமுடியாது கண்ணீர் சொட்டியதோடு தொண்டையும் அடைத்துக்கொண்டதால், "தாதா! தாதா!" என்ற வார்த்தைகளுக்குமேல் தொண்டையைவிட்டுச் சப்தம் கிளம்பவேயில்லை. அப்படியே புலம்பியபடி நின்றாள்.

அந்தகன் ஆவலே வடிவாய் இக் குரலைக்கேட்டதும், "அம்மா! குழந்தாய்! சுதாவா பேசுறது?...சௌக்யமாம்மா! ஒங்கப்பா சௌக்யமா?" என்று அப்போதும் தன் மனத்தில் பொங்கும் கோபத்தை யடக்கிக்கொண்டு யோகக்ஷேமங்கள் விசாரித்தான்.

ஸுதா:—எல்லோரும் சௌக்யந்தான் தாதா! மாமா...

மூர்:—மாமா ஊருக்கு வந்திருக்கிறான். உங்கப்பா செய்த அக்ரமத்தை நேரில் கேட்கத்தான் வந்திருக்கிறேன். எங்கே! நித்யாவைக் கூப்பிடு...ஏன்....நானே வருகிறேன்" என்று நடந்தார்.

183057


MSC 9889
SAMUEL

ஸுதா:—தாதா! தயவுசெய்து உங்களை இப்படியே திரும்பிப்போகும்படியாய் அம்மாசொல்லச்சொன்னாள். வீண் ரஸாபாஸம் உண்டாக்குவதில் அவர்களுக்குப் பிடிக்கவில்லையாம்!...

இதைக்கேட்ட மூர்த்திக்கு திடுக்கிட்டது. "என்ன!

என்ன! நித்யாவே என்னைப் போய்விடச்சொன்னாள்! நித்யாவா?... நிஜமாகவா சொன்னாள்!" என்று வியப்பே வடிவாய்க் கேட்டான்.

அதே சமயம் 'பம்! பம்' என்று ஹாரன் செய்தவாறு கார் வந்தது. அதை ஹரிஹரனே ட்ரைவ் செய்துவருகிறான். பக்கத்திலும் பின் ஸீட்டிலும் உத்யோகஸ்தர் சிலர் உட்கார்ந்திருந்தார்கள். கார் தூர வரும்போது ஹரிஹரனுக்குத் தெரியவில்லை. யாரோ பிச்சைக் காரர்கள் என்று எண்ணியிருந்தான். சற்று அருகில் வந்ததும் மூர்த்தி நிற்பது நன்கு விளங்கியதும் எங்குமில்லாத ஆத்திரமும் அவமானமும் பீறிக்கொண்டு வந்தன.

அதோடு தன் உத்யோகப் பதவி என்ன! கண்ணியமென்ன! தனது மகள் இந்த குருடனுடன் பேசிக்கொண்டு நிற்பதைக்கண்டு தன்னுடன் வருபவர்கள் என்ன நினைப்பார்களோ என்கிற தற் பெருமையும் சுயமரியாதையும் வேறு உண்டாகியதால் பல்லைக் கடித்து முகத்தைச் சுளித்தவாறு ஸுதாவை நோக்கி "சீச்சீ! உள்ளே போ. கண்ட பிச்சைக்காரச் சனியன்களுடன் பேசிக் கொண்டு நிற்க வெட்கமில்லாது வந்துவிட்டாய். போ உள்ளே! யாரடா குருட்டுப்பயலே! விடிந்தால் அஸ்தமித்தால் இந்த உபத்திர வந்தானா!...ஐயையோ! சகிக்கவே முடியல்லே சார்! விடிந்தால் அஸ்த மித்தால் இதே போராட்டந்தான். அப்பனுக்குச்ரார்த்தம், ஆயாவுக் குக் கருமாந்திரம், கன்யாதானம், உபநயனம், கண் ஆபரேஷன். பள்ளிக்கூட சம்பளம் அப்பப்பா! போதும் போதும் என்று கிறது இந்த பிச்சைக்காரர்களின் உபத்திரவம்...உம்.உள்ளே போ... டேய் பிச்சைக்காரா! வெளியே போ"...என்று அதட்டினான்.

தூரவிருந்து பார்க்கும் நித்யாவின் வயிறு எரிந்தது. ஸுதாவுக்கு உண்மையில் பயத்தினால் தேகமே கிடுகிடென்று ஆடுகிறது. மூர்த்தி யின் இதயம் துடிக்கிறது. வயிற்றெரிச்சல் சகிக்கமுடியாது அபார மான வதை செய்கிறது. அவன் ஆவேசத்தோடு, "அடேய்! மித்திர த்ரோகீ! என் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளும்போது நான் உன் கண்ணுக்கு சாதாரண மனிதனாக இருந்தேன். இன்று நான் பிச்சைக்காரனாகிவிட்டேனா? அடேய்! என் வயிறெரிந்த சாபம் வீண் போகாது" என்று ஆரம்பித்துப் பேச வாயெடுப்பதற்குள் இந்த வார்த்தைகள் எங்கே அருகிலிருப்பவர்களின் காதில் விழுந்து விடுமோ என்கிற பயத்தால் காரில் ஒரு விசையைத் திருப்பி பெரிய சத்தத்தை உண்டாக்கியதோடு "போடா வெளியே! பிச் சைக்கார நாயே! வெளியே போகிறாயா, வேட்டை நாயை அவிழ்த்துவிடட்டுமா?" என்று கூவிக்கொண்டே காரைஓட்டினான்.

ஸுதாவும் மிரண்டுபோய் உள்ளே ஓடி நித்யாவின் பரிதாபத் தைக் கண்டு பதறினாள். நித்யாவின் நிலைமை கரைகடந்துபோயிற்று. தன்னைப் பெற்ற தந்தையை நிராகரித்து விரட்டி வயிறெரியச்செய்து கணவனின் கௌரவத்தைக் காப்பதா! அன்றி கணவனுக்கு எதி

ராக நடந்து தகப்பனுரைக் காப்பதா! என்ன செய்வாள்? அவளுடைய மனது தர்மசங்கடத்தில் சிக்கித் தத்தளித்தது. விஞடிக்கு விஞடி அவள் துடிப்பு அதிகரித்ததேயன்றி எவ்வகையிலும் முடிவு கட்டவில்லை. எந்த பக்கம் துணிந்து செல்லவும் கால்கள்விலவிலத்தன.

"என்னுயிர் இப்படியே போய்விடக்கூடாதா! கடவுளே! ஏன் இப்படி சோதிக்கிருய்? என்ஞல் சகிக்கமுடியவில்லையே! ஐயோ! என் தந்தையைப் பிச்சைக்காரப்பயல் என்று சொல்லக் கேட்கும் படியாகவா விதி யமைந்தது! அவர் வயிறு என்ன கொதி கொதிக்காது?...ஆம்...கொதிக்கும்; நன்ருகக் கொதிக்கும். தளதளவென்று வென்னீர்போல் கொதிக்கும். மகா பாவி அவர் வயிற்றில் நான் பிறந்த கொடுமையில் கொதிக்கமட்டுமா கொதிக்கும்? பற்றி எரியும். எரியட்டும். நன்ருக எரியட்டும். கடவுளே! அவர்களை அப்படியே கூண்டோடு கைலாசத்திற்குக் கொண்டுபோய்விடு. நீ தயாநிதியல்லவா! இந்த ஏழை அந்தகனின்மீது அவ்வளவு தயைகூடக் காட்டக்கூடாதா?" என்று சற்று நேரம் துடித்தாள்.

"அப்பா! போய்விடுங்கள். இனி இப்பக்கமே தலை காட்ட வேண்டாம். நான் உங்கள் மகளல்ல. இந்த வீட்டு அடிமை... மனித ஜென்மாக்களுக்குள்ள சுதந்திரங்கூட அற்ற அடிமை.... போய்விடுங்கள்; போய்விடுங்கள்" என்று தன்னையறியாது வாய் விட்டுக் கதறிஞள்.

நித்யா ஒருவேளை தகப்பன் வந்ததுதெரிந்து எங்கே போய்ப் பார்த்துவிடப்போகிருளோ என்கிற பயத்தால் ஹரிஹரன் எதையோ மறந்தவன்போல் திரும்பிவந்து தன் கூடவந்தவர்களை காரிலேயே உட்காரவைத்துப் பின் உள்ளே ஓடிவந்தான். அதே சமயம் அவள் மேற்குறித்தவாறு கதறியதால் ஹரிஹரனின் கோபம் பின்னும் பொங்கியது. நித்யாவின்கூச்சல் வெளியிலிருப்பவர்களுக்குக் கேட்காதிருக்கும் பொருட்டு அவளது வாயை அப்படியே கெட்டியாகப் பொத்தி அவளை ஒரு குழந்தையைப்போல் தூக்கிச்சென்று அவளறையில் கட்டிலின்மீது போட்டுவிட்டுக் கதவைச் சாத்திக்கொண்டு வெளியே வந்தான்.

அப்போதுதான் சோதாவைப்போல் தலையை வாரிக்கொண்டு பூமியில் புரளும்படியான துணியுடன் இறங்கிவரும் யாதவனைப் பார்த்த ஹரிஹரன், வீதிப்பக்கம் கையைக் காட்டி "துரத்து" என்று கண்ணுல் சைகை செய்தான்.

நாயிக்கு மாம்ஸம் கிடைத்தால் விடுமா! அதுபோல் யாதவன் தனக்கிட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு செய்ய ஒரே ஓட்டமாக ஓடிஞன். உலகம் இருண்டதாகத் தோற்றினும், உணர்ச்சிகள் இருண்டு சூனியமாகி விடவில்லையல்லவா! தன்னைப் பிச்சைக்காரன் என்று கூறிய சுடுசரத்தைத் தாங்காது துவண்டுபோய்ப் புழுவாய்த்

துடித்துக்கொண்டிருக்கும் மூர்த்தியின்முன்பு யாதவ் பெரிய எளனச் சிரிப்புடன் போய் நின்று,

'ஓய்! பரமயோக்யமான பிள்ளையைப் பெற்ற புண்ணியவானே! என்ன சமாச்சாரம்? பிள்ளையைத் தேடிக்கொண்டுவந்தீரா! அஹ்ஹ ஹா...உம்ம பிள்ளையழகை பேப்பரில் போட்டுத்தான் படிக்க வேண்டும். அயோக்யப்பயல். எங்கள் வீட்டில் எச்சில் பொருக்கி வயிறு வளர்க்கும் நாயி. என் தங்கையை இழுத்துக்கொண்டு ஓடப் பார்த்த திருடனைத் தேடிக்கொண்டு வந்தாயா! போடா! குருட்டுப் பயலே! இந்த வீட்டுப்படி ஏறினல் காலே உடைத்துவிடுவேன்... உம். ஓடு!' என்று சற்றும் தயை தாக்ஷிண்யம் பாராமல் குருடனின் கையைப் பிடித்து தரதரவென்று இழுத்துக்கொண்டுவந்து வெளியே தள்ளினன்.

கூட வந்தவருக்கு தேகம் கிடுகிடென்று நடுங்கியது. இந்த கூட்டம் மனிதக்கூட்டமா! அன்றி ராக்ஷஸக்கூட்டத்தைச் சேர்ந்த வர்களா! என்கிற சந்தேகமே உண்டாகியது. அவரால் ஆத்திரத் தைச் சகிக்கமுடியாதுபோனதால், "சீச்சீ! பிசாசே! ஒங்கப்பன் ராக்ஷஸன்; நீ ப்ரம்ம ராக்ஷஸன். மூதேவியே! கடவுள் உன் அக்ரமத் திற்குப் பலன் உன்னையும் கண்ணையவித்துக் குருடனைச் சந்தி சிரிக்கவைத்து இந்த அந்தகனின் வயிற்றெரிச்சலைத் தீர்க்கவேண்டும். சோதாப்பயலே!" என்று மண்ணைவாரித் தூற்றித் திட்டியவாறு மூர்த்தியை அழைத்துக்கொண்டு போனர்.

மூர்க்கனகிய யாதவ் நடு வீதி என்பதையும் பாராமல் ஆத் திரத்தின் வேகத்தில் ஒரு கல்லை எடுத்து பலமாக வீசினன். நல்ல வேளையாக அந்த கல் மூர்த்தியின்மீதோ, கூடவந்தவரின்மீதோ படாமல் வீதியில் சென்றுகொண்டிருந்த ஒரு பெண்ணின் தலையில் பட்டு ரத்தம் பீறிக்கொண்டுவந்தது. உடனே வீதியில் கும்பல் கூடிவிட்டது.

24

வாயைப் பொத்தி உள்ளே தள்ளப்பட்ட நித்யா, உண்மையில் சோகத்தின் மிகுதியால் மயக்கமாகவே கிடந்தாள். பிறகு கண்திறந்து பார்க்கும்போது தகப்பனரின் நினைவு அவளால் தடுக்கமுடியாது பலமாக எழுந்தது. 'என்னவானரோ! எப்படிச் சென்றரோ! எது எப்படியாயினும் பார்த்துவிட்டே வருவது' என்று ஒருவிதமான துணிபுடன் ஆவேசங்கொண்டவளைப்போல் வீதிப் பக்கம் ஓடிவந்தாள்.

அங்கு ஒருவரும் இல்லாததால் வந்தவர்கள் போய்விட்டார்கள் என்றறிந்து தோட்டத்தில் புகுந்து வீதிக்குச்சென்றாள். அந்த பங்

களாவிற்கு இரண்டு பக்கமும் கேட்டு இருப்பதால் ஒரு கேட்டு வழியாக வந்தவர்கள் போய்விட்டார்கள்.

மற்றெரு கேட்டின் பக்கத்துக் கதவு அடைத்திருந்தது. அதன் வெளியில் பலத்த கூக்குரலும் வசைபாண ப்ரயோக சப்தமும் கேட்டது. தன் பிதாவுக்குத்தான் அங்கு ஏதோ ஆபத்து வந்து விட்டதாக எண்ணிப் பதைபதைத்து ஓடிப்பார்த்தாள்.

பூர்ண கர்ப்பிணியாகிய ஒரு பெண்ணின் தலையிலிருந்து ரத்தம் வழிகிறது. அவளை மற்றெருத்தி தாங்கிப் பிடித்துக்கொண்டு வாயில்வந்தவாறெல்லாம் சரமாரியாய்த்திட்டியபடியே 'எங்கே அந்த கம்மனுட்டிமவன்? கண்ணு அவிஞ்சாபோச்சு. புள்ளெதாச்சி மேலே கல்லெடுத்துபோட்டு மண்டெயே ஓடச்சுப்புட்டானே பாவி! அவன் நாசமாப்போக! அவன் கை ஓடிய அவன் கண்ணு அவிஞ்சு திண்ணெ தடவ. வாடா வெளியே! பொட்டச்சிமாதிரி உள்ளே பூந்துகிணு உட்டுடுவாங்கன்னு பாத்தியா!

இதே கல்லு, ஐயோ பாவம்! ஒரு குருடன் தெருலேபோனுனே அவன் மேலே உயிந்திருந்துதுன்ன இன்னு ஆயிருக்கும்? ஒம் பணத் திமிரே கொள்ளிவெக்க. ஒம்பணத்தெயும் ஒன்னெயும் கொளுத்த' என்று முற்றுப்புள்ளிவைக்காமல் ஆளுக்கொருவிதமாகத்திட்டுவதை கேட்ட மகாயூகசாலியாகிய நித்யாவுக்கு நன்றாகப்புரிந்துவிட்டது.

யாதவ் சற்று முன் எதிரில் வந்ததும், பின்னர் வீதிப்பக்கம் பார்த்ததும் ஞாபகம் வந்ததால் அவன் தன் பிதாவை அடிக்க வீசிய கல்லுதான் இந்த கர்ப்பிணியின்மீது பட்டது என்று அறிந்ததும் பின்னும் புழுவாய்த் துடித்தாள்.

உடனே கதவைத் திறந்து அந்த கர்ப்பிணியையும் அவளைச் சார்ந்த மனிதர்களையும் உள்ளே அழைத்து ஒரு மரத்தடியில் கிடத்தி அவர்களுக்குச் சமாதானம் செய்தபடியே, உள்ளே ஓடி ஒரு மருந் தைக் கொணர்ந்து அந்த கர்ப்பிணியின் காயத்தை அலம்பித்தானே வைத்துக் கட்டியபடியே, "அம்மா! இந்தமாதிரி விபத்து நேர்ந்து விட்டதற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். உங்களிடம் இதயபூர்வமான மன்னிப்புக் கோருகிறேன். தயவுசெய்து நீங்கள் மன்னிக்கவேண்டும். எங்கள் வீட்டில் ஒரு உறவினரின் மகன் மூளைக்கோளாறுக்காக வைத்தியத்திற்கு வந்திருக்கிறது. அது தெரி யாமல் செய்துவிட்டதற்கு நான் மன்னிப்புக் கேட்டு உங்கள் செலவுக்கும் இதோ இதைத் தருகிறேன்" என்று கூறி தன் கை வளையல் ஒன்றைக் கழட்டி, அந்த கர்ப்பிணியின் கையிலேயே போட்டு, "அம்மா! இதை விற்று நீங்கள் செலவு செய்துகொண்டு இதை இப்படியே மறந்துவிடுங்கள். என் வீட்டில் இப்படி நடந்த தால் நான் ஜவாப்தாரியாகிவிட்டேன். மன்னிக்கவேண்டும். சந்தடி செய்யாமல் இதோடு போய்விடுங்கள். தெரியாது செய்துவிட்டான். எனக்காகப் போய்விடுங்கள்" என்று கெஞ்சிக் கேட்டாள்.

தங்கவளையல் கனவிலும் எதிர்பாராதவிதமாகக் கிடைப்ப தென்றால் யாருக்குத்தான் நாக்கில் ஜலம் ஊறாது. "நித்யாவின் அமிருதம்போன்ற குணத்தினருமையையும், ஏழையின்மீது தயை காட்டி அன்பொழுகப் பேசும் கனிவையுங் கண்டு அந்த கர்ப்பிணி யின் மனம் இளகியது. அவள் நித்யாவுக்கு ஒரு கும்பிடும் போட்டு விட்டு "தாயே! ஒங்க தங்கமான கொணத்துக்காவ நாங்கசொம்மா போறேம். இல்லாங்காட்டிப்போனா என் புருசன் பலே கில்லாடி, இந்த அக்குறும்பு பண்ணவனே சந்திலே இயுத்து அவதாரம் போட வச்சுட்டுத்தான் உடுவாங்க. மவாலச்சுமியாட்டம் நீங்க சொல்றத் துக்காவ போய்வாறேம்" என்று கூறிச் சென்றாள்.

நித்யாவுக்கு ஒருபுறம் சகிக்கமுடியாத சோகமும் ஒருபுறம் தன் பிதாவின்மீது கோபமும் பொங்கியது. எது பொங்கி என்ன பயன். பேசாமல் உள்ளே வந்தாள். கல்லாலடித்துவிட்டு ஓடிய யாதவன் பிறகு மூன்று நாட்கள் வீட்டிற்கே வரவில்லை. ஹரிஹர னும் ஏதும் வாய் திறக்கவே இல்லை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 OCT 1941
MADRAS

25

"ஸுதா! இதோ இந்த கவரைப் பார்த்து உடனே அதன்படி ரெடியாக விரு" என்று அதிகாரத்துடன் அட்ட காஸமாய்க் கூறி ஹரிஹரன் சென்றான். ஸுதா வியப்புடன் கடி தத்தைப் படித்ததும் திடுக்கிட்டாள். அவளுக்கு அபாரமான சந் தோஷம் உண்டாவதற்குப் பதில் அளப்பரிய விசனமே உண்டாகித் தேம்பித் தேம்பிப் புலம்பவாரம்பித்தாள்.

ஹரிஹரன் தன் தாயாரிடம் வந்து "அம்மா! நீ சொல்லிய படியே எழுதிப் போட்டேன். ஹாஸ்டல் தலைவியிடமிருந்து கடிதம் வந்துவிட்டது. இன்று ராத்திரி வண்டிக்கே புறப்படலாம். அவ ளுக்குப் பிரயாணத்துக்கு வேண்டியதைத் தயார் செய்" என்று சொல்லிச் சென்றதால் பிரண்டை பாட்டியின் மனம் குளிர்ந்தது.

ஸுதாவுக்கு வேண்டிய துணிமணி சாமான்களையும், இதர உபயோகமான தர்மாஸ்ப்ளாஸ்கு, டிப்பன் பாக்ஸ், கூஜா, ட்ரங்கு பெட்டிகள், தலைவாரிப் பின்னவேண்டிய சாமான்கள், சாந்து, குங்குமம் முதலியனவும் கட்டவாரம்பித்தாள்.

ஸுதாவுக்கு இதுகாறும் உண்டாகிய மன அதிர்ச்சிகளைவிட இப்போது தன்னருமைத் தாயாரைப் பிரியுங்கால விதி யமைந்த விசனத்தை அவளால் சகிக்க முடியாது பொங்கியது. "அன்று

தாமோதரனிடமிருந்து பிரிந்ததுமுதல் பிடித்த சனியன் இலேசில் விடாதுபோலிருக்கிறதே!'' என்று தனக்குள் குமுறினாள்.

அந்தக் கடிதத்துடன் நித்யா இருக்கும் அறைக்கு ஓடினாள். நித்யா பகவத் கீதை படித்துக்கொண்டிருந்தாள். அவள் படித்துக் கொண்டிருந்த கட்டமாவது. அஞ்ஞானம் என்னும் அழுக்கு உன்னிடம் இருக்கும் வரையில் நீ சுஞ்ஞானத்தைப் பெறமுடியாது. நீ செய்யும் எந்த காரியத்தையும் என்மீது பாரத்தையும் நம்பிக்கையும் போட்டு உன் கடமை என்று செய்; பலாபலனைக் கருதாதே. உறவினர் என்று நீ நினைப்பதெல்லாம் வெறும் அக்ஞானமேயன்றி க்ஷத்ரிய தருமத்தைக் கைவிடுவது சரியல்ல. உனக்கும் அவர்களுக்கும் என்ன சம்பந்தம்? நீ யாரு! அவர்கள் யாரு?''

என்கிற வைராக்ய போதனைகள் ஏராளமாயிருந்ததேயாகும். அதே சமயம் ஸுதா நித்யாவின் முன்பு பிரஸன்னமாகி, ''அம்மா! இதோ பாரேன். பாட்டியும் அப்பாவும் சேர்ந்து செய்த காரியத்தின் விபரீதத்தைப் பார்த்தாயா! ஐயோ! நான் எப்படி உங்களையும் குழந்தைகளையும் பிரிந்து தனி வாஸம் செய்வேன்? என் மனது தவிக்கின்றதே!'' என்று கண்ணீர்விட்டாள்.

தான் படிக்கும் கட்டத்திற்கும் ஸுதா சொல்லும் விஷயத்திற்கும் எத்தனை பொருத்தமாகவிருக்கிறது. அக்ஞானத்தை விடும்படி எவ்வளவு படித்தாலும் அதை விடமுடியவில்லையே! பெற்றவர்களையும் உடன்பிறந்தவனையுந்தான் பிரிந்தாயிற்று. சந்தோஷம் என் பதைச் சிறிது ஊட்டிவந்த குழந்தையையும் பிரியவேண்டுமா! உம். கிருஷ்ணா! உன் சோதனையை ஜெயிக்க என்னால் முடியுமா? இக் குழந்தையையும் பிரியும்படியாக நான் என்ன அத்தனை கொடுமை செய்தேன்?'' என்று மனதுக்குள் தவித்தாள்.

கண்ணீர் பெருகியவாறு, ''ஸுதா! அழாதேம்மா! என் குடும்பத்தைமட்டுமின்றி உங்கள் குடும்பத்தையும் சேர்த்து என் பாவந்தான் ஆட்டுகிறது. என் கர்மா என்னோடுதான் தொலையும்போலிருக்கிறது. இந்த சதியாலோசனையை நான் முன்பே அறிவேன். உன் தந்தையின் காலைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினேன். உன்னையும் என்னையும் தண்ணீரிலிருந்து மீனைப் பிரிப்பதுபோல் பிரிக்கவேண்டாமென்று மன்றாடினேன். கதறினேன். கண்ணீர்சொட்டினேன். கல்லும்கரையும்; ஆனால் உன் தந்தையின்கடின இதயம்கரையவில்லை. உன்னை நானே தூண்டிவிட்டு தாமோதரனை நேசிக்கச் செய்ததாயும், அவனுக்கு உன்னை விவாகம் செய்துவைக்கவே சூழ்ச்சி செய்வதாயும் உன் பாட்டி செய்துள்ள கலகம் உன் பிதாவின் மூளையை முற்றுகையிட்டுவிட்டதால் என் பேச்சு செவியில் ஏறவே இல்லை.

''உன்னுடன் இத்தனை நாட்கள் செய்த சகவாஸத்தின் பலன் போதும். நாவல்களில் காதலிப்பதும் கட்டியணைப்பதும் வருவது போல் என் குழந்தையையும் குட்டிச்சுவர் செய்ததுபோதும். இனி

மேல் பேச்சேவேண்டாம்'' என்று ஒரே வார்த்தையில் கூறினர். மனிதர்களின் சுபாவமறியாது பேசும் மனிதரிடம் அதற்குமேல் தர்க்கம் செய்ய நான் விரும்பாது பேசாதிருந்துவிட்டேன்.

அம்மா! ஸுதா! நீ வருத்தப்பட்டு உபயோகமில்லே. என்னை விட்டுப் பிரிந்தபிறகாவது உனக்கு நல்லகாலம் பிறக்கட்டும். உன் தந்தையின் விருப்பப்படி நீ நன்ருகப் படித்து நல்லறிவு பெற்றுச் சந்தோஷமாகவிரு. இந்த துர்ப்பாக்ய மனுஷியையும், அந்தப் பிச்சைக்காரப் பையனையும் மறந்துவிடு. அவனைப்பற்றிய எண்ணத்தை அடியோடு துறந்துவிடு. உன்னோடு நான் ஒரு நிமிடம் பேசினல்கூட உன் தந்தைக்கும் பாட்டிக்கும் விபரீதமாகத் தோன்றும். இனி என்னோடு நீ பேசாதேம்மா! பகவான் உனக்கு சர்வமங்களமும் கொடுக்கட்டும்'' என்று ஆசிர்வதித்தாள்.

ஸுதாவுக்குத் துயரம் தாங்கமுடியவே இல்லே. "அம்மா! அம்மா! இதென்னம்மா இப்படி சொல்கிருய்? உன் மனது துணிகிறதா! நானு உன்னேயும், மாமாவையும் மறப்பது! இந்த ஜன்மாவில் அது முடிகிற காரியமா! அம்மா!''...என்ருள்.

நித்:—உம்...நான் ஒரு மனுஷியே யல்லவேம்மா! நான் கேவலம் துர்ப்பாக்யப் பிண்டம். உதவாக்கட்டை. வெறும் மாமிஸ பர்வதம் அவ்வளவுதான். இதற்கு இனி உணர்ச்சி ஏது? மனிதத் தன்மை ஏது. ஒன்றுமில்லே. காலனின் வரவை எதிர்பார்க்கும் ஒரே ஆசைதான். அதோ உங்கபாட்டிவருகிருர். போம்மா--என்று தானே நித்யாவை வலுவிலனுப்பிவிட்டுப் பேசாமல் படுத்துக்கொண்டாள்.

ஸுதாவின் மனது அடங்கவே இல்லே. தகப்பனரிடம் ஓடினுள். "அப்பா! எனக்கு இங்குள்ள படிப்பைவிட அங்கு என்ன அதிகமிருக்கிறதென்று இந்த காரியம் செய்தீர்கள்? நான் அம்மாவையும் குழந்தைகளேயும் விட்டுப் போகவேமாட்டேன். நான் வாமுடியாதென்று எழுதிவிடுங்கள். நான் உங்களேயெல்லாம் பிரிந்திருக்கவேமாட்டேன்'' என்று கண்ணீர்விட்டாள்.

ஹரி:—ஸுதா! உன் க்ஷேமத்தைக் கோரி எதையும் செய்வதற்கு எனக்கு உரிமையுண்டு. நீ கேவலம் கழுதையாகிவிட்டாய். உன்னை வளர்க்கவேண்டிய முறைப்படி வளர்க்க எனக்குத்தெரியும். பேசாது போ! இந்த நீலி யழுகை யழுதால் நிறுத்திவிடுவான் என்று அந்த மகராஜி சொல்லிக்கொடுத்தாளா! 'அந்த பருப்பு இங்குவேகாது போ! உம்...இன்றே ப்ரயாணத்திற்குத் தயார்செய்துகொண்டு சித்தமாகக் கிளம்பு'' என்று கூறி வெளியே போய்விட்டார்.

அதற்குமேல் என்ன செய்வாள் பாவம்! இத்தனைக்கும் காரணம் பாட்டியும், அண்ணனுந்தானென்பது அவளுக்கு நன்ருகத் தெரிந்தது. எது தெரிந்து என்ன பயன்? விதியை மாற்றமுடியுமா!

இரவு ப்ரயாணத்திற்கு வேண்டிய சகலமும் பிறண்டைபாட்டி 5 நிமிஷத்தில் செய்து முடித்தாள். உயிரையும் உடலேயும் பிரித்து

எமன் கொண்டுபோவதுபோல் ஸுதாவையும் நித்யாவையும்பிரித்து ஹரிஹரன் அழைத்துச்செல்ல வண்டியும் கொண்டுவந்தான்.

ஸுதா நெருப்பின்மீது பட்ட புழுவெனத் துடித்தவாறு 'அம்மா! அம்மா! நான் போகிறேன். அடிக்கடி கடிதம் எழுதுங்கள். என்னை மறந்துவிடாதீர்கள். தர்மூ! அம்பீ! அம்மாவிடம் சொன்னதைக் கேட்டுக்கொண்டு சமத்தாகவிருங்கள். பிடிவாதமோ, அசட்டுத்தனமோ செய்யக்கூடாது....அம்மா, தாதா முதலியவர்களின் க்ஷேமத்தை அடிக்கடி எழுதுங்கள்' என்று கண்ணீர் பெருகக் கூறினாள்.

நித்யாவினால் பேசவே முடியவில்லை. சில விநாடிகள் ஊமை போலிருந்தாள். பிறகு சற்று சமாளித்துக்கொண்டு "ஸுதா! நம் தேசமும் அடிமை; தேசத்திலுள்ள மக்களும் அடிமை. நானோ அடிமையிலும் அடிமை. என் கடிதம்கூட உனக்கு வரக்கூடாதென்கிற நிலைமை ஏற்படும் என்பதை இப்போதே அறிந்துகொள்ளு. மாமாவைப்பற்றிக் கனவில்கூட நினைக்காதே. நீ க்ஷேமமாய் புத்திசாலியாயிருந்தால் போதும். இந்த பாவியின் கடிதத்தை எதிர்பார்க்காதே" என்று கூறி முடிப்பதற்குள் 'எத்தனை நேரமடீ! ரயிலுக்கு நேரமாகிவிட்டது' என்று பிரண்டைபாட்டி ஒரு கர்ஜனை செய்தாள்.

உடனே ஸுதா போய் காரில் ஏறிக்கொண்டாள். காரும் கன வேகமாய்ப் பறந்தது. வீட்டில் நிச்சப்தமும் குடிகொண்டது. இனி வாய் குளிர வார்த்தை சொல்வதற்குக்கூட நித்யாவுக்கு யாருமில்லை. கூறத்திறமற்ற வேதனையில் அவளுடைய உள்ளம் ஆழ்ந்தது.

26

வேண்டாம், வேண்டாமென்று எத்தனை சொல்லியும் கேளாது சென்ற தன் தகப்பனாரைப்பற்றிய கவலையுடனேயே தாமோதரன் தவித்துக்கொண்டிருந்தான். ஞானம்பாளும் 'என்ன விபரீதம் நடக்குமோ?' என்று திகில் பட்டுக்கொண்டே இரவு பகல் தூக்கமின்றி துடித்தாள்.

மூர்த்தியும் அவனை அழைத்துச் சென்ற பெரியவரும் வாடித் துவண்டு உடைந்த உள்ளத்துடன்வந்து சேர்ந்தார்கள். நடந்தவற்றையறிந்த இருவரும் அபாரமான துக்கத்தையடைந்து, "உம். இதைவிட விபரீதம் என்ன நடக்குமோ என்று நாங்கள் தவித்ததற்கு பகவான் இம்மட்டுமாவது விட்டாரே என்று சந்தோஷப்படத்தான் வேண்டும்" என்று எண்ணினார்கள்.

மூர்த்தியின் இதயம் அளிந்த புண்ணாகிவிட்டது. "இனி நாம் எப்படி பிழைப்பது. பிழைப்புக்கு வழி என்ன செய்யலாம்?" என்கிற கவலையில் தாமோதரன் மூழ்கிவிட்டான். மனம் வெறுத்துப் போன வேகத்தில் கூலி வேலை செய்யவும் ரயிலடியில் மூட்டைத் தூக்கிச் சம்பாதிக்கவும்கூடத் துணிந்தான்.

தங்கள் பொருட்டு தன்னையே த்யாகம் செய்துகொண்ட உத்தமி நித்யாவை எண்ணி தாமோதரனின் மனது சகிக்கவியலாத சங்கடத்தில் தவித்தது. நாட்களோ, ஒன்று இரண்டு என்று சுழன்று கொண்டே போகின்றன. ஒத்தைப் பைசா சாப்பாட்டிற்கு வருவாயின்றி மூன்று ஆத்மாக்கள் ஜீவிக்கவேண்டுமென்றால் எப்படி முடியும்? தினம் பட்டினி கிடக்கத்தான் முடியுமா! அல்லது தினம் யார் சாப்பாடு போடுவார்கள்? அன்றி அந்த பட்டிக்காட்டில் பயிர்த் தொழில் செய்து சுமாராகப் பிழைக்கும் ஜனங்களிடையே வேறு தொழில்தான் என்ன கிடைக்கும்?

"உம். இப்பாழும் ஊரைவிட்டு எங்கேனும் மூட்டை தூக்க வேண்டியதுதான். இவ்வூரில் சொல்ப நிலங்கள் உள்ளவர்களுக்கே விளைவுவாசி இல்லாமலும், கிஸ்தி கட்டமுடியாமலும் ஊரைவிட்டுப் போய்க்கொண்டிருக்கையில் ஆகாசம், பூமி இரண்டையும் நம்பி நிற்கும் நாம் எப்படி பிழைப்பது" என்று தாமோதரனும் ஞானும் பாளும் கவலைகொண்டு தவித்தார்கள்.

சில தினங்களுக்குள்ளேயே மூவரும் கிளம்பி வேறு ஊருக்குச் சென்றார்கள். ஏறுத இடம் பாக்கி இல்லை. ஏறி இறங்கி முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு வந்தாயிற்று. இனிமேல் என்ன வழி? இதே ஏக்கத்தில் தாமோதரனுக்கு மூளையுங் கலங்கிவிடுமோ என்ற பயம் உண்டாகியது.

"எனக்கேன் ஸுதாவிடத்தில் இத்தகைய ப்ரேமையைக்காட்டி அதன்மூலம் இப்படிப்பட்ட தண்டனையை பகவான் காட்ட வேண்டும்? இது என்னுடைய போதாக்காலக்கொடுமைதானே! அக் குழந்தையை என்றென்றும் என் சகோதரியைப்போல் நான் நினைக்கும்படிக்கு ஏன் செய்திருக்கக்கூடாது? எல்லாம் நான் செய்த துர்ப்பாக்கியந்தானே!

என்கதி எப்படியோ ஆகிறது. அன்று ஏதோ உருவம்தெரிந்ததாக ஸுதா கவலைப்பட்டதன் பலன் அவளை என்ன செய்ததோ! அவள் என்ன விபத்திற்காளானளோ தெரியவில்லையே! அக்காவுக்கு இந்த ரகஸியத்தின் உண்மை தெரிந்துவிட்டதோ! அவள் என்னைப் பற்றி என்ன நினைக்கிறளோ!" என்ற கவலையொருபுறம் வாட்டி வதைக்கின்றது. இந்த நிலைமையில் இதே ஏக்கத்தில் உடல் உருமாறி பொலிவுகுன்றி, நோயாளிபோலாகிவிட்டான்.

பூகம்பம் வந்தால் எப்படி ஒரு தீவு அமுங்கிப்போயும் ஒரு புதிய உலகம் ச்ருஷ்டிக்கப்பட்டும் காக்ஷி கொடுக்கிறதோ, அதே

போன்றுதான் மனிதர்களின் வாழ்க்கையிலும் பெரும் மாறுதல்கள் உண்டாகிவிடுகின்றன. மனத்தில் பெரிய புயல் காற்றும் பூகம்பமும் உண்டாகிச் சித்திரவதை செய்யும்போது இதுகாறுமிருந்த லஜ்ஜை, எப்படி இதைச் செய்வது என்கிற தியக்கம், கோழைத்தனம் முதலியன யாவும் மறைந்துபோய் பிச்சை எடுக்கவும் பிணந் தூக்கவும்கூட தாமோதரனின் மனது துணிந்துவிட்டது என்றால் அவன் இதயம் எப்படித் துடித்திருக்கும்?

ஒரேயடியாய் இரண்டுநாள் பட்டினியில் ஞானமும், மூர்த்தியும் பிரக்ஞைகூட அற்றுவிட்டவர்கள்போலாய்விட்டார்கள். இதைக்கண்ட தாமோதரனுக்குச் சகிக்கவேமுடியவில்லை. "சீச்சீ! இரண்டு ஆத்மாக்கள் இவ்விதம் துடிக்கும்படி பார்த்திருப்பதா அழகு? இல்லை. இல்லை. இது தருமமே இல்லை. இத்தனை தூரம் பகவான் சோதிக்கும்போது மானமாவது ஆகாசமாவது? ஒரு ஸ்ரீமத் கம்பீரமும் வேண்டாம். நான் ஒரு பிச்சைக்காரன். என் முன்னறி தெய்வங்களைக் காக்க நான் பிச்சை எடுப்பதில் என்ன அவமானம். ஒன்றுமில்லை. இதோ, இப்போதே எழுந்துபோகிறேன்'' என்று மனத்தை திடப்படுத்திக்கொண்டு உள்ளே சென்றான். தானே கையில் ஒரு பாத்திரத்தை எடுத்துக்கொண்டு "பவதி பிக்ஷாந்தேஹி. பவதி பிக்ஷாந்தேஹி'' என்று வாய்விட்டு வயிற்றிலிருந்து குமுறிக் கொண்டுவரும் சோகமும் வீரமும் கலந்த த்வனியில் கேட்டான்.

அந்தோ! பரிதாபம், அவன் இதயக்கடலில் கொந்தளித்தெழும் உணர்ச்சி அலைகளின் மோதலை விவரிக்கக்கூடுமா! தான் இப்படி பிக்ஷை கேட்கும் காலம் ஒன்றுவரும் என்று அவன் ஸ்வப்பனங் கூடக் காணுதிருக்கையில் இத்தகைய விதியமைந்ததால் அவன் புத்தியே தடுமாறியது. "பவதிபிக்ஷாந்தேஹி''என்ற உடனே பிச்சை போட்ட வீட்டில் ஒருமாதிரி இருந்தது.

'பவதியும் இல்லை. அவதியுமில்லை' என்று கோபத்துடன் கூறும் புண்ணியாத்மாக்களின் பேச்சைக் கேட்கும்போது இவனுக்கு அபாரமான கோபமும், ஆவேசமும் உண்டாகி "ஏன் இவர்கள் போடக்கூடாது? எப்படி இல்லையென்று சொல்லலாம்'' என்று ஒரு க்ஷணம் தோன்றும். மறுக்ஷணமே "இதென்ன மதியீனம்? ஏற்பது இகழ்ச்சி என்ற மூதுரை மறந்துவிட்டதா! என் கர்மாவை நான் அனுபவிக்காமல் விடமுடியுமா! என் பிறர்மீது எரிந்து விழ வேண்டும்?'' என்கிற தெளிந்த புத்தியும் தோன்றியது.

சுமார் இரண்டு தெருவு முற்றும் வீடுவீடாய் ஏறி இறங்கியதில் கொஞ்சம் சாதமும், கொஞ்சம் ரஸமும் குழம்புங் கலந்ததும் கிடைத்தன. ஆவலோடு அலையக்குலைய வீட்டிற்கு வந்து முதல்முதல் தாய் தந்தைக்கு இந்தச் சாப்பாட்டைப் போட்டு அவர்களின் களையைத் தெளிவித்தான். பசியின் கோரமான கொடுமையில் சாப்பிட்ட

ஞானம், "தாமூ! சாப்பாட்டுக்குப் பணம் ஏது? ஓட்டலில் எப்படிக் கொடுத்தான்?" என்றாள்.

தாமோதரனுக்கு மனத்தில் ஒருபுறம் அடக்கமாட்டாத மகிழ்ச்சியும், ஒருபுறம்தீராதவெறுப்பும தோன்றி, ஒன்றேடொன்று யுத்தம் செய்துகொண்டிருந்தது. அச்சமயம் ஞானம்பாள் கேட்ட கேள்வி தாமோதரனுக்குப் பின்னும் குழப்பத்தைக் கொடுத்தது. உண்மையைச்சொன்னல் பெற்றோர்களின் மனது துடிக்கும்; ஆனல், இன்று பொய்சொல்லலாம்: என்றும் உண்மையை ஒளிக்க முடியுமா !" என்று சற்று யோசனை செய்தான்.

மீண்டும், மீண்டும் கேட்டதால் தாமோதரன் நித்யாவுக்குத் துணையாய் கடகடவென்று சிரித்தான். "ஓட்டல் சாப்பாடு நமக்கு எப்படிகிடைக்கும்?என்உபனயனத்தன்றுஉபாத்தியாயர் சொல்லிக் கொடுத்த உபதேசத்தை இன்றுதான் நடைமுறையில் செய்தேன்".

என்று முடிப்பதற்குள், "ஹா!....பவதி பிக்ஷாந்தேஹி" என்று பிச்சைக்கா போனய்?...ஐயையோ" என்று ஞானம் அலறினள். மூர்த்தி வாய்திறக்காது உள்ளுக்குள் குமுறிப் போனன்.

ஞானம்:—ஐயோ ! தாமூ ! பிச்சையா எடுத்தாய் ?

தாமூ:—ஆமாம்மா ! பிச்சை எடுப்பதால் என்ன குறைந்துவிட்டது. இந்த வழியையாவது பகவான் காட்டினரே என்று நான் சந்தோஷப்படுகிறேன். இதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். இதோ வருகிறேன்'—என்று தந்திரமாகக் கூறி, தாயார் எதிரிலிருந்தால் இன்னும் ஏதேனும் கேள்வி பிறக்கும் என்ற யோசனையினல் வெளியே போய்விட்டான்.

அவன் மனது துடிக்கும் துடிப்பில் தற்கொலைக்கும் துணிந்து விடுவான்போலானன். ஆனல் நிர்ப்பாக்ய பிம்பங்களாகிய பெற்றேரின் பரிதாப உருவங்கள் அவனை அந்த பயங்கரத்தினின்றும் விடுதலை செய்தன. தங்களை நம்பிக்கை த்ரோகம் செய்ததுமல்லாது பிச்சைக்காரன் என்று பலர் முன்பு ஈவிரக்கமற்று விரட்டிய ஹரிஹரனைப் பழிக்குப் பழி வாங்கிவிட அவன் மனது துடிதுடித்தது. தன் சகோதரியையும், தன் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட சுதாவையுங்கூட அவன் இதயம் மறந்தது. "பழிக்குப்பழி; பழிக்குப்பழி" என்ற ஆவேசம் அவன் உள்ளத்தில் பலமாகப் புகுந்து வேலை செய்யவாரம்பித்தது.

ஒவ்வொரு தினமும் ஒவ்வொரு புதிய தெருவுக்குச் சென்று "பவதி பிக்ஷாந்தேஹி" என்று கூறி மாதவரம் வாங்குவதும் மிஞ்சிய நேரத்தில் வேலைக்கு அலைவதுமாக தாமோதரன் களைத்துப் போனன். ஒரு கவளம் அன்னம் போடுவதென்றாலும் சில இடங்களில் இலேசில் கிடைக்கிறதா ! "நல்ல வயசுப் பிள்ளை, எங்காவது வேலை செய்து சம்பாதிப்பதற்கென்ன! தடியன் தினம் தினம் வந்து

விடுகிறான்" என்று முகத்தைக் காட்டிச் சீறிவிழும் புண்ணியாத்மாக்கள் எத்தனைபேர் இல்லை. அம்மாதிரி வசைபாண ப்ரயோகமாகும் சமயத்தில் தாமோதரனின் மனது விபரீதமாக எல்லை கடந்து போய் "நம் கதிஅந்த படுபாவி ஹரிஹரனால்தானே இப்படியாயிற்று? அந்தசுதாவை நேசித்ததால்தானே இம்மாதிரியாயிற்று" என்றுதான் தோன்றுமேயன்றி ஒருக்ஷணம் விதி என்பதை மறந்துவிடுவான்.

இம்மாதிரி கண்டவர்களிடமும் வார்த்தையைக் கேட்டுக் கொண்டு வயிறு வளர்ப்பதைவிட விஷத்தை வாங்கிப் பெற்றோர்களையும் கொன்றுவிட்டுத் தானும் குடித்து இறந்து அந்த பழியை ஹரிஹரன்மீது சாட்டி அவனைத் தூக்கிலேற்றிவிடலாமா" என்று கூடச் சில சமயம் துணிந்தான்.

மூர்க்கத்தனம் தலைக்கேறியபிறகு எதைத்தான் செய்யமாட்டான். அவன் மனம் அவனுக்கே அடங்காது வெறி பிடித்ததுபோலாயிற்று. தனக்கு விஷம் எப்படி கிடைக்கும். பகிரங்கமாக வாங்க முடியாததலால் எப்படித் திருடலாம்"என்றுகூட யோசித்து, 'எலி பாஷணம் கடையில் வாங்குவது' என்று முடிவும் செய்தான்.

மனத்தினால் எதைவேண்டுமாயினும் முடிவுசெய்வது வெகு சுலபம். நடைமுறையில் செய்துக் காட்டுவதுதானே ச்ரமம். மனம் முறிந்த வேகத்தில் விஷம் வாங்கிவிடவும் கூண்டோடு கைலாஸம் போய்விடவும் நினைத்தானேயன்றி கடையில் போய் விஷத்தைக் கேட்கும்போது அவனையறியாது நெஞ்சு 'திடுக்கு, திடுக்கு!' என்று அடித்துக்கொண்டது. ஏதேதோ பயங்கரத் தோற்றங்கள் "திடீர்! திடீர்" என்று தோன்றி தேகத்தையே நடுக்கலுறச் செய்தன. "நம் பெற்றோரை நம் கையால் கொல்வதா! ஐயையோ! கொலையல்லவா? ஆம்....ஆம்...கொலை...கொலை...படுகொலை. என் முன்னறி தெய்வங்களை நானே செய்யும் அநியாயக் கொலை" என்று அவன் இதயத்தில் பலமாகக் கூறித் தாக்குவதால் கால்கள் நடுங்க இதயம் துடிக்க ஒரே ஓட்டமாக ஓடிவந்தான். "எத்தகைய கொடும்பாவத்தைச் செய்யத் துணிந்தேன். குப்பைவாரிக் கூலி சம்பாதித்தேனும் என் பெற்றோர்களை காப்பாற்றியே தீருவேன். பாழும் நெஞ்சே! இனி பிழைப்புக்கு அஞ்சாதே!"

என்று தனக்கே தான் தைரியங்கூறியவாறு வீட்டிற்குத் திரும்பினான். வரும் வழியில் ஒரு வீட்டுக்காரி இறந்துவிட்டாள். அவள் பெண்கள் கதறுவதும் முட்டிக்கொள்வதும் கண்டு தாமோதரனுக்குத் தேகம் சிலிர்த்து மயிர்கூச்செறிந்தது. "மற்ற எந்த பொருளுக்கும் மாற்றுப்பொருள் காணலாம். பெற்ற தாயிக்கும், தந்தைக்கும் மாற்றுக் காணமுடியுமா? ஐயோ! மதியீனமாகிவிட்டதே' என்று நினைத்தபடி வீட்டிற்கு ஓடிவந்தான்.

அப்போது மூர்த்தி படுத்தபடியே, "ஞானம்! எத்தனை நாளைக்குத்தான் இப்படி கஷ்டப்படுவது? என் மனம் புண்ணாகித் தத்தளிக்கின்றதே என்ன செய்வேன்?" என்றான்.

ஞானம்:—எனக்குமட்டுமில்லையா! என்னுடைய இத்தனை கஷ்டங்களும் என் கண்மணி தாமோதரனின் முகத்தைப் பார்த்ததும் என்னையறியாது பஞ்சாய்ப் பறந்துபோகின்றன. அவன் இருக்கும் வரையில் நமக்கொரு குறைவும் இல்லை. ஆண்டவன் சீக்கிரம் அவனுக்கொரு வேலை கொடுத்து ஆதரிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்—என்று கூறுவதைக் கேட்டுக்கொண்டே வந்த தாமோதரனின் உள்ளம் உருகியது. இத்தகைய விலையிலா அன்பை வைத்துள்ளவர்களையும் கொன்று நாமும் சாக நினைத்தது எத்தனை முட்டாள்தனமானது? எவ்வளவு பயங்கரமானது!" என்று நினைத்துக் கண்ணீர்விட்டவாறு அடிவயிற்றிலிருந்து சுறந்துவரும் அன்பின் வேகத்துடன் "அம்மா!" என்றழைத்தபடியே வந்துதாயின் மடியில் படுத்தான். அவனையறியாது அவன் இதயத்தில் ஒரு புத்துணர்ச்சியும் அமிருதம் பருகியதுபோன்ற ஆனந்தமும் உண்டாயின.

27

சகடக்காலுக்கும், உலகப்போக்கிற்கும் வித்யாஸமின்றி சுற்றிக்கொண்டே நாட்கள், மாதங்கள் எனக் கடந்துசெல்கின்றன. நித்யாவின் சந்தோஷம் அடியோடு மறைந்து உயிரிருந்தும் உயிரற்ற சவம்போல் காணப்பட்டாள். "கல்யாணத்திற்கு முன்பிருந்த யவுஸும் ஆசையும் ஹரிஹரனுக்கு எப்படித்தான் வரண்டுபோயிற்றோ!" என்று பிரண்டை பாட்டியே வியப்புற்றாள் என்றால் வேறு என்ன வேண்டும்?

நித்யாவுடன் பேசுவோரும் கிடையாது. மனத்திற்கு வேறு ஆறுதலான வழியே இல்லை. வீட்டைவிட்டு வெளிக்கிளம்பவே மனம் பிடிக்காததால் கோயிலுக்குப் போவதைகூட நிறுத்தினாள். சதாகாலமும் பகவத்கீதையும், பட்டினத்தார் பாடலும் அவளுக்குத் துணையாகவமைந்தன. அவற்றை படிக்கப்படிக்க அவளது வைராக்யம்பின்னும் பன்மடங்காகப்பெருகியது. நாளடைவில் அந்த இரண்டு புத்தகங்களையே தனக்கு ஜீவநாடியாகவும் எண்ணினாள்.

அடியாருறவு மரன் பூசை நேசமு மன்புமன்றிப்
படிமீதில் வேறு பயனுள தோபங் கயன் வகுத்த
குடியான சுற்றமுந் தாரமும் வாழ்வுங் குயக்கலங்கள்
தடியா லடியுண்ட வாறொக்கு மென்றினஞ் சார்ந்திலரே.

பூணும்பணிக்கல்ல பொன்னுக்குத் தானல்ல பூமிதனைக்
காணும்படிக்கல்ல மங்கையர்க் கல்லநற் காட்சிக்கல்ல
சேணுங்கடந்த சிவனடிக் கல்லவென் சிந்தைகெட்டுச்
சாணும் வளர்க்க வடியேன் படுந்துயர் சற்றல்லவே.

என்ற பாடல்களைச் சதா வாய் முணுமுணுக்கும். தன்போக்காக அதன் அற்புதச்சுவையிலீடுபட்டுத் தானே பேசுவாள். இதைக் கண்ட தர்மாம்பாள் விஷயம் விளங்காமல், "எம்மா! நீயே ஏதோ பேசறே! சிரிக்கறயே! எதுக்கம்மா பண்றே?" என்று கேட்கும். சில சமயம் அதற்குப் பதில் சொல்லத் தெரியாது விழிப்பாள். சில சமயம், "அதுவா! ஸ்வாமிமேலே பாட்டுப் பாடினல் மெய் மறந்த ஆனந்தம் வருகிறது. அதனல் பாடுகிறேன்; பேசுகிறேன். உனக்கும் அதைச் சொல்லித்தரட்டுமா!' என்று கூறிக் குழந்தையை உட்காரவைத்துக்கொண்டு,

அழுதாற் பயனென்ன நொந்தாற் பயனென்ன வாவதில்லை
தொழுதாற் பயனென்ன நின்னையொருவர் சுடவுரைத்த
பழுதாற் பயனென்ன நன்மையுந் தீமையும் பங்கயத்தோ
னெழுதாப்படி வருமோசலி யாதிரென் னேழை நெஞ்சே.

எரியெனக் கென்னும் புழுவோ வெனக்கெனு மிந்தமண்ணுஞ்
சரியெனக் கென்னும் பருந்தோ வெனக்கெனுந் தான்புசிக்க
நரியெனக் கென்னும்புன் னாயெனக்கென்னுமிந் நாறுடலைப்
பிரியமுடன் வளர்த்தேனித னாலென்ன பேறெனக்கே.

என்கிற பாடல்களைத் தனது உணர்வு குன்றிய நிலைமையில் மெய்ம்மறந்து பரவசமுற்றுச் சொல்லிக்கொடுத்தாள்.

இதைக்கேட்டுக்கொண்டே வந்த பிரண்டைபாட்டி, தர்மாம் பாளை நாலறை வைத்து இழுத்துக்கொண்டு, "ஏண்டீ நித்யா! ஒத்தி யைத்தான் கல்யாண பயித்தியமாக்கி காதல், மூக்கல் என்கிற வலையில் தள்ளி வதைத்து ஊர் சிரிக்கவடித்துப் பெற்ற அப்பனையும் உடன்பிறந்தவர்களையும் பிரிந்து வனவாஸம்போல் ஓட்டியாயிற்று. இந்த பச்சைக்குழந்தைக்குப் பட்டினத்தார் பாடலைச் சொல்லிக் கொடுத்து ஆண்டிப்பரதேசியாய் கப்பரையைக் கையிலேந்தி வீதி வீதியாய் அலையச்செய்து வேடிக்கைப் பார்க்கவேண்டுமென்று இம்மாதிரி செய்கிருயா! போதுண்டியம்மா! போதும். நான் நாட்டுப்பெண் கொண்டுவந்த சவரணைபோதும். படுபாவி பெத்து என் காலில் கட்டிவிட்டுச் சாவானேன், நான் இப்படி வைத்துக் கொண்டு அழுவானேன். என்னுயிசு மாளக்கூடாதா?" என்று மாயக்கண்ணீர்விட்டு மூக்கைச் சிந்தியவாறு சென்றுள்.

இதைக்கேட்டுக்கொண்டே வந்த யாதவ், "சரிதான். ஒத்தி அப்படி; இன்னெருத்தி இப்படி. தர்மராஜாவை எப்படியாக்கப் போகிருள்? தன்னருமைத் தம்பியைப்போல் திருடக் கற்றுக்

கொடுத்துவிடுவாள். பிறகு சரியாய்விடும். பாட்டீ! இந்த பாழும் புத்தகங்களை யார் இங்கு வாங்கிக்கொடுத்தது? எப்போது பார்த்தாலும் புத்தகம், புத்தகம் என்று மூழ்கிவிடுகிறாளென்று அப்பாவும் திட்டுகிறார். இவைகளைக்கொண்டு கொளுத்திவிடுகிறேன். பட்டினத்தாருமாச்சு. நாட்டுப்புறத்தாருமாச்சு'' என்று கூறிக் கொண்டே அங்கு மேஜைமீதிருந்த கீதை, பட்டினத்தார் பாடல் முதலிய புத்தகங்களைச் சற்றும் தாக்ஷிண்யமின்றி ராக்ஷஸன்போல் தூக்க வருவதைக்கண்ட நித்யாவின் உள்ளம் பதறியது. அவள் இரு புத்தகங்களையும் சடக்கென்று எடுத்துக்கொண்டு திரும்புவதற்குள் யாதவ், ''மரியாதையாய்க் கொடுத்துவிடுகிறாயா! கையிலிருந்து பிடுங்கிக்கொள்ளட்டுமா! கொடு. கொடுத்துவிடு'' என்று அசல் சோதாவைப்போல் கேட்டான்.

''யாதவ்! இரண்டு கண்ணும் தெரியாத அந்தகரைக் கல்லால் அடிக்கப்போய் அது துரதிருஷ்டவசமாய் ஒரு கர்ப்பிணியின்மீது விழுந்ததும் உள்ளே ஓடி ஒளிந்துகொண்ட பெரிய வீரனல்லவா நீ! உன் சூரத்தை என்னிடமா காட்டப்பார்க்கிறாய்?...யாதவ்! நான் உன் தாய் என்பது ஞாபகமிருக்கட்டும், தூரப்போ!'' என்று சற்றுக்கடுமையாகவே கூறினாள்.

''ஐயோ! தாய்! தாய்....தாயைப்பாரு. தாய்! பேய் என்று சொன்னால் பொருந்தும். உங்கப்பன் என்மீது வீசின கல்லு அந்த பெண்மீது பட்ட ரகஸியத்தை மறைத்து இப்படிப் பழிசுமத்துகிறாயோ! வெகு ஒழுங்கான குடும்பத்தில்பிறந்த பெண்ணேல்லியோ! அதான் இதுபோல் உளறுகிறாய்! இப்படிக் கொடு'' என்று நித்யாவின் கையிலிருந்து பிடுங்கப்போனான்.

நித்யா கொடுக்காது ஓடினாள். அதே சமயம் வந்த ஹரிஹரன் விழி பிதுங்கிவிடும்படிப் பார்த்தபடியே ''என்ன நாடகமிது?''என்று கர்ஜனை செய்தான். தன் ரகஸ்யம் எங்கு வெளியாகிவிடுமோ என்கிற கவலையால் யாதவ் வெகு யோக்யன்போல் பேசத் தொடங்கி, ''நாடகமா! ஒரு பெண்ணை ச்ருங்கார ரஸத்தில் பழக்கியாயிற்று. இன்னொரு பெண்ணை சன்யாசினியாக்கிவிட வைராக்ய ரஸத்தில் பழக்குகிறாள். பட்டினத்தார் பாடலைச் சொல்லிக்கொடுத்து பச்சைக்குழந்தையின் மனத்தைக் கெடுத்துக் குட்டிச்சுவராடிக்கிறாள். அந்த புத்தகத்தை மரியாதையாய்க் கேட்டால் கொடுக்கமாட்டாளாம். அதுதான் நாடகம்'' என்றான்.

ஹரிஹரனுக்குக் கோபம் பீறிக்கொண்டு வந்தது. நித்யாவை ஒரே இழுப்பாக இழுத்து, ''கள்ளீ! ஒங்கப்பனை அடித்துத் துரத்திவிட்டேனென்கிற ஆத்திரத்தில் இக்குழந்தையின் புத்தியைக் குலைக்க முன்வந்தாயா!'' என்று கூறிக்கொண்டே புத்தகங்களைப் பிடுங்கி அப்படியே யாதவனிடம் கொடுத்து ''இதைக் கொண்டு குப்பைத் தொட்டியில் போடு''என்றான்.

நித்யாவின் உள்ளம்பதைத்தது. எதிர்த்துப்பேசக்கூடாதென்று எண்ணியும் அவள் மனது கேட்காது எல்லை கடந்தது. "இந்த புத்தகத்திற்குக்கூட நான் அருகதையற்றவளா! இதையும் நான் தொடக்கூடாதா! ஸரஸ்வதியின் ப்ரஸாதங்கூட என்னை திரஸ்கரிக்கவேண்டுமா?" என்று பலபலவென்று கண்ணீர் விட்டுக் கேட்டாள்.

புத்தகத்துடன் யாதவ் விசிலடித்தபடியே ஓடினான். ஹரிஹரன் பல்லைக் கடித்துக்கொண்டு, "உன்னழகுக்குப் பட்டினத்தார் பாடலும், கீதையும் வேண்டுமா? இவைகளைப் படித்துத் தேறிய புத்திதெளிவில்தான் என் குடியைக் கெடுக்கிறாய்போலிருக்கிறது. இனி இந்த நாடகம் வேண்டாம். இந்தா! படிக்க வேண்டுமானால் இதோ இவைகளைப் படி" என்று கூறியவாறு தன்னறைக்குச் சென்று சில புத்தகங்களைக் கொணர்ந்து நித்யாவின் முன்பு நீட்டி" உம். பிடி இந்தா!' என்று அதட்டினான்.

அப்புத்தகத்தின் மேல் அட்டையில் கொட்டை எழுத்தில், "காமரஸிகரஞ்சனி" என்று எழுதப்பட்டிருந்ததைப் பார்த்ததும் நித்யாவின் தேகம் சிலிர்த்து முகம் சுருங்கியது. "இன்ப லீலா போதினி" "சிற்றின்ப ரகஸ்யம்" என்கிற புத்தகங்களும் அதோடு இருக்கக் கண்டு பின்னும் வெறுப்புற்று முகத்தைத் திருப்பியபடியே, "இதற்கெல்லாம் லாயக்குள்ளவள் நானல்ல. இந்த அருமையான புராண பாராயணம் செய்யும் யோக்யதையும் எனக்கில்லை. "பாத்திரம் அறிந்து பிச்சை இடு" என்பதுபோல் தகுந்த மனிதர்களுக்குக்கொடுத்தால் உபயோகமுண்டு" என்று தன்னைமீறிய மனக்கசப்புடன் கூறினாள்.

ஹரிஹரனின் கோபம் கரைபுரண்டது. "மூதேவி! வாயைப் பாரு. உம் இதை வாங்கப்போகிறாயா! இல்லையா?" என்றான்.

நித்யா:—முடியாது. இதற்காக என்னை என்ன செய்தாலும் சரிதான்.

ஹரி:—அப்படியா! இந்த வைராக்யம் உண்மையானால், இனி உன் கையால் எந்த புத்தகத்தையும் தொடக்கூடாது. ஒரு கடிதங்கூட நீ யாருக்கும் எழுதக்கூடாது. தெரிந்ததா! ஜாக்ரதை—என்று கூறியவாறு போய்விட்டான்.

என்னே சோதனை! என்னே பரிதாபம். இளங்கொடி அனலில் கருகுவதுபோல் நித்யாவின் மனம் கருகியது. ஐயோ! பாவம்! நித்யா! ஆதியில் எதிர்பார்த்த நன்மை என்ன! இப்போது அவளடையும் பலனென்ன? இந்த மூர்க்கனிடம் எதிர்த்துப் பேசிதான் ப்ரயோஜன முண்டா! இன்னும் மனவெறுப்பு அதிகமாகியதேயன்றி வேறொன்றும் தோன்றவில்லை. வாயே திறக்காமல் பதுமைபோல் சுவருடன் சாய்ந்தாள்.

அதே சமயம் தபால்காரன் "ஸ்ரீமதி நித்யகல்யாணியம்மாளுக்கு" என்று உரத்துக் கூறி கவரை நீட்டினான். இக்குரல் காது கேட்கும் முன்பே "இப்பிடி கொடுடாப்பா!" என்று பிறண்டை பாட்டி

வாங்கிக்கொண்டதை நித்யா கவனித்தாள். "தலைக்குமேல் போகும் வெள்ளம் முழமானாலென்ன! கஜமானால் என்ன! எதுவரினும் வரட்டும்" என்ற வைராக்யத்துடன் பேசாதிருந்தாள்.

பிரண்டை பாட்டி கடிதத்தை வாங்கி உடனே கிழித்துப் படிக்கவாரம்பித்தாள்.

"என் அன்புருவாகிய அம்மாவுக்கு ஸதா நமஸ்காரம். க்ஷேமம் க்ஷேமத்திற்கு எழுதவும். வனவாஸம் அனுப்புவதுபோல் அப்பாவும் பாட்டியும் என்னையனுப்பி விட்டு மனங்குளிர்ந்திருக்கிறார்கள். நான் இங்கு வந்து இத்தனைமாதங்களாகியும் எனக்கு இந்த ஹாஸ்டல் கொஞ்சங்கூடப் பிடிக்கவே இல்லை. யாரைக்கண்டாலும் எனக்குச் சற்றும் பிடிக்கவில்லை. இவைகளைக் கடிதத்தில் எழுதி முடியாது.

நான் வாராவாரம் தவறாது உனக்குக் கடிதம் எழுதியும் நீ ஏன் எனக்குப் பதிலே எழுதவில்லை? நீயுமா என்னை வெறுக்கிறாய்? அம்மா! மாமா க்ஷேமமாயிருக்கிறாரா? அவரைப்பற்றி ஏதாவது தகவல் தெரியுமா! நீ எழுதிய ஒரு கடிதத்தில் எத்தனை வைராக்யத்தை எனக்கு எடுத்துச் சொல்லியிருந்தும் என் மனம் கேட்கவில்லை. உள்ளத்தில் உள்ளதை உன்னிடம் சொல்லியாவது சற்று ஆறலாம் என்று இதை எழுதுகிறேன். நான் என் தனியறையில் அனாதைபோல் கிடக்கிறேன். மாமாவின் நினைவை என்னால் மறக்கவே முடியாது. என்னைக் கொன்றாலும் சரி. அவரை நான் இந்த ஜன்மத்தில் மறக்க மாட்டேன். தயவுசெய்து அவரைப்பற்றிய தகவல் ஏதாவது தெரிந்தால் கட்டாயம் எழுதுங்கள். அல்லது அவருடைய விலாஸமாவது தெரிந்தால் எழுதுங்கள். என்னால் அவருடைய க்ஷேமத்தையறியாதிருக்கவே முடியவில்லை. என்னால் அவருக்கும் உங்களுக்கும் நேர்ந்த கதியை நினைக்க நினைக்க என் இதயம் துடிக்கின்றது. உலகத்தில் எத்தனையோவிதமான ப்ரக்ருதிகள் இருக்கலாம். ஆனால் நம் வீட்டு மனிதர்களைப்போன்ற மூர்க்கக் குணமும் சந்தேக சித்தமும் ஒன்றுசேர்ந்த பிண்டங்கள் இருக்கவே இருக்காது. இக்கடிதத்தை நீ அப்பாவுக்கோ, பாட்டிக்கோ, காட்டவேண்டாம். படித்து உடனே கிழித்துவிடு. இதற்காவது பதில் எழுது. தப்பித் தவறி அண்ணனிடம் அகப்படப்போகிறது. பத்திரம். உடனே பதில். மாமாவைப்பற்றி கட்டாயம் எழுது.

உன் பிரிய,

சுதாமதி"

என்று எழுதியிருந்ததைப் படித்த கிழவி ஒரு துள்ளு துள்ளிக் குதித்தாள். "ஐயையோ! அடி பாவிப்பெண்ணே! உன்னைச் சரியானபடி தண்டித்தும் உன் புத்தி இப்படியா கெட்டுவிட்டது? தப்பித்தவறிகூட அண்ணன் பார்க்கக்கூடாதாம். கிழித்தெறிய வேண்டுமாம். என்ன அநியாயம்! இத்தனை தைரியமும் துணிச்சலும் எப்படி வந்தது?" என்று முகவாய்க்கட்டையில் கையைவைத்துக்கொண்டு கடிதத்துடன் தன் மகனின் அறைக்குப்போனாள்.

28

நாற்றுக்கணக்கான பெண்கள் ஹாஸ்டலில் சேர்ந்துபடிப்பதென்றால் ஆனந்தத்திற்கும், கும்மாளத்திற்கும் கேட்க வேண்டுமா! காலையில் எழுந்ததுமுதல் இரவு படுக்கும் வரையில் பெண்கள் தங்களுக்குள்ள முறைப்படி படிப்பதும், விளையாடுவதுமாக நேரத்தை வகுத்துக்கொண்டு பேரானந்தத்தில் சுயேச்சையாய்த் திரியும் பறவைகளைப்போலிருக்கிறார்களேயன்றி ஒருவருக்காவது விசாரமோ, விசனமோ கிடையாது.

இரண்டொரு பெண்கள் மட்டும் ஒருவரிடமும் சேராது தனியாகவிருந்தார்கள். அதற்கே மற்ற பெண்கள் பரிகாஸம் செய்தார்கள். இப்போது சுதா ஒரு கர்னாடகப் பைத்தியம்போல் வந்தது பின்னும் பரிகாஸத்திற்கு ஆதாரமாகியது. ஹாஸ்டல் வாழ்க்கை எத்தனையோ மேன்மையானதென்றும், பொழுது போவதே தெரியாது சொர்க்கப்பதவிபோலிருக்கும் என்றும் சுதாவுக்கு அவள் தகப்பனார் வண்டி முழுதும் உபதேசம் செய்ததெல்லாம் வெறும் ஹம்பக்கென்று அவளுக்குத் தோன்றியது. அவளுக்கென்று தனியறை கொடுக்க அதிகப்படியான பணம் கட்டியிருந்ததால் மூன்றாவது மாடியில் 9-ம் நம்பர் ரூம் கிடைத்தது. அந்த ரூமுக்கடுத்த பக்கம் ரூம் கிடையாது. இதுதான் கோடியறையாதலால் அவ்வறைக்கு இரண்டுபக்கம் கதவுகள் இருந்தன. ஒன்று மற்ற அறைகள் வரிசையாக உள்ள வராண்டாப் பக்கமும் இன்னொன்று வீதிப்புறம் பார்த்த சிறிய தனி வராண்டாபக்கமும் அமைந்திருந்ததால் சுதா முதல் வராண்டாவின் கதவை மட்டும் திறந்து உபயோகித்துக்கொண்டு இன்னொரு கதவைத் திறப்பதே இல்லை.

இதைக்கண்ட மற்ற பெண்கள் சுதாவைக் கேலி செய்வதும், கட்டுப்பெட்டி, கர்னாடகம், வெறும் குக்ராமம், என்றெல்லாம் நேரிலேயே பரிகாஸம் செய்யவாரம்பித்தார்கள். குளிப்பதற்கும், சாப்பிடுவதற்கும் கீழே வருவதைத் தவிர மற்ற சமயங்களில் தன்

பள்ளிக்கூடம் உண்டு. தானுண்டு. தன் தனியறையுண்டு. ஆகாயம் முதல் இயற்கையழகின் அற்புதம் உண்டு” என்று இருப்பாள்.

“ஏதாவதொரு பாடத்தின் நிமித்தமாவது நம்மை வந்து கேட்க மாட்டாளா!” என்றுகூட சில பெண்கள் எதிர்பார்த்தார்கள். சுதாவோ கண்ணைக் கட்டி காட்டில் விட்டதுபோலிருந்ததால் முதலில் சில தினங்கள் வரையில் வெகு மவுனமாயிருந்ததோடு வேளா வேளைக்குச் சாப்பிடுவதற்குக்கூட சங்கோஜத்துடனேயே இருந்தாள். பிறகு ஒரு சிறிது தெளிவு பெற்று தனக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக்கொடுக்கவும், தெரியாதவற்றைத் தெரிந்து கொள்வதற்கும், ஏதேனும் சந்தேகம் தோன்றினால் அதை அங்குள்ள மேட்ரன், அல்லது தலைவியிடத்திலேயே கேட்டுத் தெரிந்து கொள்ளவும், பள்ளிக்கூட சம்மந்தப்பட்ட வகைகளுக்கு உபாத்தியாயினியிடமே கேட்டறியவும் தொடங்கினாள்.

ஹாஸ்டலுக்கு வந்து வெகு நாள் வரையில் நித்யாவையும், குழந்தைகளையும் பிரிந்ததுபற்றி சதா அழுதுகொண்டே இருந்தாள். தன்னால்தானே தாமோதரனுக்கும், நித்யாவுக்கும் இத்தகைய கஷ்டம் உண்டாகியது என்று நினைக்கும்போது அவளுடைய துயரம் எல்லை கடந்துவிடும். தாமோதரனை எண்ணி எண்ணி ஏங்கித் தவித்துருகுவதைமட்டும் அவளால் கட்டுப்படுத்தக் கூடவில்லை.

ஓயாது சோகமாகக் காணப்படும் சுதாவை ஹாஸ்டல் பெண்கள் அழூமூஞ்சி அவதாரம் என்றும், சோகரஸம் நன்றாக நடிப்பாள் என்றும், தாராளமாக அவள் காது கேட்கவே கூறுவார்கள். இதைக்கேட்டு மனது துடிப்பாளேயன்றி ஒருவரிடமும் சண்டைக்குப்போகவில்லை. “ஏன் சுதா! இப்படிச் சொல்கிறார்களே உனக்கு ரோஷமில்லையா!” என்று ஒரு பெண் வேண்டுமென்றே கேட்டாள். அதற்கு சுதா கோபித்துக்கொள்ளாமல் சாந்தமாகவே, “இருக்கட்டுமே! சொன்னதால் என்ன குறைந்துவிட்டது. நமது இந்து சமூகத்தின் ஜீவநாடிகளாக விளங்கும் ராமாயணத்தில் சோகரஸமில்லையா! பாரத பாகவதங்களில் சோகரஸம் இல்லையா! எந்த காவியம், கதை, சரித்திரங்கள் எதை எடுத்தாலும் மக்களின் மனத்தை எளிதில் மாற்றக்கூடிய வன்மை பெற்றது சோகரஸந்தானே! அது என்னிடமிருப்பதில் என்ன வியப்பு?” என்று சொல்லிவிட்டுப்போனாள். இதற்கும் பிடிகொடுக்காததால் அம்முறையும் மாணவிகள் ஏமாந்தேபோனார்கள். தலைவிகூட சுதாவிடம் வினயமாகப் பேசி “ஏன் இப்படியிருக்கிறாய்?” என்று கேட்டுப்பார்த்தாள். ‘ஒன்றுமே இல்லை’ என்று கூறிவிட்டாளேயன்றி அதற்கும் பிடிகொடுக்கவில்லை. நித்யா கடிதம் எழுதாத குறைதான் பெருங்குறையாகவிருந்தது.

தான் முன்பு தெரிவித்த கடிதத்தை எழுதியபிறகு அதற்குப் பதில் வரும் என்று இரவு பகல் ஏங்கி எதிர்பார்த்துக்கொண்டிருந்

தாள். அவள் எதிர்பார்க்கும் சமயம் தபால்காரன் கடிதத்தைக் கொடுத்ததும் ஆவலோடு படிக்கவாரம்பித்தாள். அவளுடைய ஏமாற்றம் கூறத்திறமில்லை. நித்யாவிடமிருந்துஎதிர்பார்த்ததற்கு நேர் மாருக பிரண்டைபாட்டி தாறுமாருகத்திட்டியும், கண்டித்தும் எழுதி யிருந்ததைப்பார்த்ததும் அவள்தலைமேல்இடி இடித்ததுபோலாகியது.

தன் கடிதங்கள் எல்லாம் ஒன்றுகூட நித்யாவிடம் சேரவே இல்லை. இந்தக் கிழப் பிணத்தினிடந்தான் சேர்ந்துவிடுகின்றன. அதனுல்தான் பதில் வரவில்லை என்ற ரகஸியமறிந்து புழுவாய்த்துடித் தாள். இன்னும் 15 தினங்களில் வரும் கிரிஸ்மஸ் விடுமுறைக்கு ஊருக்குப்போய் தன் ஆவல் தீர நித்யாவிடம் 10 தினங்களாவது பேசி மகிழ்ந்து குலாவி மாமாவின் விஷயத்தையும் தெரிந்துகொண்டு வரலாமென்று வெகு ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

நாட்கள் கடந்து செல்கின்றதேயன்றி சுதாவுக்கு ஒரு கடிதங் கூட வரவில்லை. மற்ற பெண்களுக்குத் தகப்பனுர் வந்து அழைத்துச் செல்வதாகக் கடிதங்களும், ஆணை கிடைத்தால் வந்துவிடும்படி மணி யார்டர்களும் தினம் வருவதைப் பார்க்க சுதாவின் உள்ளம் கொதிக்கிறது. தன்னை இங்கு படிக்க அனுப்பினுர்களா! தண்டனை செய்து பழிதீர்க்க அனுப்பினுர்களா! என்று தோன்றி கோபம் வந்ததேயன்றி அவளுக்கு உத்ஸாகமென்பதே மறைந்துபோயிற்று. என் கடிதங்கள் தன் கைக்கு சேராமல்போனுல்தான் என்ன! தானுக ஒரு கடிதம்கூட எழுதவில்லையே!' என்று நித்யாவின்மீதுகோபங்கூட வந்தது. ஆனுல் அடுத்த க்ஷணமே அவள் ஒருபோதும் எழுதாதிருக்க மாட்டாள். அவளுடைய நிலையில் ஏதோ விசேஷம் இருக்கவேண் டும். அதனுல்தான் எழுதவில்லை. அல்லது அவள் எழுதும் கடிதத் தையும் எனக்குச் சேரவிடாது தடுத்துவிடுகிருர்களோ! என்னவோ! இவ்விரண்டில் ஒன்றில்லாவிட்டால் இம்மாதிரி ஒருபோதும் நடக் காது. நாம் எவ்விதமாவது யுக்தி செய்து அம்மாவுக்குக் கடிதம் சேரும்படிக்குச் செய்யவேண்டும்' என்று எண்ணியிருக்கையில், ஒரு யோசனை தோன்றியது. அதாவது அங்கு தான் வாசித்த பள்ளிக்கூடத்து உபாத்தியாயினிக்குக் கடிதம் எழுதி அதில் அம்மாவுக்குக் கடிதம் வைத்து நேரில் கொடுத்து பதில் எழுதச் செய்யவேண்டுமென்று முடிவு செய்தாள்.

உடனே அதேபோல் உபாத்தியாயினிக்குக் கடிதம் எழுதி அதில் நித்யாவுக்கும் ஒன்று வைத்து அன்றே அனுப்பிவிட்டு பதி லுக்கு வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். எதிர் பார்த்த தினத்தன்றே சுதாவுக்கு இரண்டு கவர்கள் கிடைத்தது கண்டு பரம சந்தோஷமடைந்து பிரித்துப் படிக்கவாரம்பித்தாள்.

"அன்பார்ந்த சுதாமதிக்கு உபய க்ஷேமம்.

நீ இந்த பள்ளிக்கூடத்தையும் வீட்டையும் ஊரையும் விட்டுப் பெரிய படிப்புக்காக பெரிய ஹாஸ்டலில்போய்ச்

சேர்ந்தபிறகும் என்னை மறக்காது கடிதம் எழுதியதற்காக மிகவும் சந்தோஷம். ஹாஸ்டலில் நீ சந்தோஷமாயிருப்பாய் என்று நம்புகிறேன். நன்ருகப் படித்து நல்ல பதவிக்கு வந்து உன் கல்வியறிவால் நல்ல உபகாரம் உண்டாகி பொதுமக்களுக்குப் பயன்படவேண்டுமாய் கடவுளை ப்ரார்த்திக்கின்றேன்.

உங்கப்பாவை மாற்றிய விவரம் என்னைப்போல் நீயும் அறியாதது வியப்பாகவே இருக்கிறது. நான் உன் கடிதப் படியே வீட்டிற்குப் போனேன். வீட்டு முகப்பில் 'டுலெட்' பலகையைப் பார்த்து திடுக்குற்றேன். அங்கிருந்த தோட்டக்காரனை விசாரித்ததில் உங்கப்பாவை திருமால்புரத்திற்கு மாற்றிவிட்டதாயும் அவர்கள் போய் ஒரு வாரமாகிறதென்றும் தெரிந்தது. ஆகையால், உன் தாயாருக்கு வைத்திருந்த கடிதத்தை அவர்கள் விலாஸத்திற்கு நானே அனுப்பிவிட்டேன். அடிக்கடி கடிதம் எழுது. நன்ருகப் படித்து பாஸ் செய். தலைவிக்கும், உபாத்தியாயினிகளுக்கும் அடங்கி நல்ல குணத்துடன் மரியாதையாக நடந்து நல்ல பெயர் வாங்கு.

இங்ஙனம் உன் அன்புள்ள,
சுவர்ணம்."

18305

இதைப் படித்ததும் இன்னும் ஒரு முழும் அவளைத் தூக்கிவாரிப் போட்டது. "நான் ஏதேதோ எழுதியிருக்கும் கடிதத்தை அங்கு அனுப்பிவிட்டாளே! இது யார் யார் கையில் கிடைக்குமோ! இதனால் எனக்கும், அம்மாவுக்கும் இன்னும் என்ன ஆபத்து நேருமோ!" என்று நடுநடுங்கினாள். அவளையறியாது ஏதோ குழப்பமுண்டாகியது. அவள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த ஆவலெல்லாம் பொடிசூர்ணமாகியதுபோலாயிற்று. கூடவிருக்கும் மற்ருெரு கவரையும் பிரித்துப் படிக்கவாரம்பித்தாள்.

"சௌ. சுதாவுக்கு அனேக ஆசீர்வாதம். க்ஷேமம். க்ஷேமத்திற்கு எழுதவும். என்னை திருமால்புரத்திற்கு மாற்றிவிட்டார்கள். இந்த ஊரில் வெதர் நன்ருகவே இல்லை. ஊரும் அழகாக இல்லை. பட்டிக்காடுபோலிருக்கிறது. ஆகையால் நீ க்ரிஸ்மஸ் லீவுக்கு இங்கு வரவேண்டாம். அங்கேயே வேண்டிய வேடிக்கைகள், சங்கீதக் கச்சேரிகள், ஸினிமாக்கள் எல்லாம் இருப்பதால் அவைகளுக்கு உன்னை அழைத்துச் செல்லும்படி உன் தலைவிக்குக் கடிதம் எழுதிப் பணமும் அனுப்பியிருக்கிறேன். ஆதலால் அங்கேயே இரு.

உன் அப்பா,
ஹரிஹரன்"

இதைப் படித்ததும் சுதாவுக்கு எப்படித்தானிருக்கும்? அவள் இதயம் அப்படியே வெடித்துவிடும்போலாயிற்று. தன்னிரையழிந்து படுத்தாள். உலகமே தலைகீழாய்ச் சுற்றுவதுபோல் தோன்றியது.

சஞ்சிகை ரூபமாக சில நாவல்கள்

இவ்வாண்டின் புது நேயர்களில் பலர் சென்ற ஆண்டில் வெளியான உணர்ச்சி வெள்ளம், சந்தோஷ மலர் இரண்டும் சஞ்சிகை ரூபமாகக்கிடைக்குமாவென்று கேட்கிறார்கள். கொஞ்சம் காப்பிகளே எங்கள் கைவசமிருப்பதால் வேண்டியவர்கள் உடனே வருடச் சந்தா ரூ. 1—8 (வெளி நாடு ரூ 2.=3 ஷிலிங்) அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். கீழ்க்கண்ட நாவல்களிலும் சில இருக்கின்றன.

ஜீவியச் சுழல்	அணா 10	மாலதி	அணா 4
கானல் நீர்	,, 10	படகோட்டி	,, 4

உடனே முந்துங்கள்

கீழ்க்கண்ட நாவல்களில் சில காபிகளில் பேபர் பழுத்திருப்பதால் அவற்றை பாதி விலைக்குக் கொடுக்கிறோம். தபாற் செலவு வேறு. கீழ்க்கண்ட 3 புத்தகங்களையும் ஒரே சமயத்தில் வாங்குபவர்கள் ரூ 3/- அனுப்பினால் தபாற் செலவின்றி அனுப்புகிறோம்.

	விலை.	குறைந்த விலை.	தபாற் செலவு உள் நாடு.	தபாற் செலவு வெளி நாடு.
வைதேகி	ரூ 2 8 0	ரூ 1 4 0	$4\frac{1}{2}$ அணா	$6\frac{3}{4}$ அணா
சாரமதி	ரூ 1 12 0	ரூ 0 14 0	$2\frac{1}{2}$	$3\frac{3}{4}$
பரிமளகேசவன்	1 4 0	0 10 0	2	3

ஸெப்டம்பர் 25-ந் தேதிக்குள்

சேரும் சந்தாநேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப்போட்டு, 6 சீட்டுகளெடுத்து அவற்றிற்கு 7-வது இதழில் தெரிவித்தபடி புத்தகங்கள் பரிசாகக் கொடுக்கப்படும்.

சந்தாநேயர்களுக்கு ஒரு அபூர்வ சந்தர்ப்பம்

ஏற்கனவே சந்தாதாரராயிருப்பவர்கள் எத்தனை புதிய நேயர்களைச் சேர்த்தனுப்புகிறீர்களோ, அத்தனை எட்டணா விலையுள்ள நாவல்களை இனாமாகக் கொடுப்பதுடன் உங்களுடைய நம்பர்களும் சீட்டுக் குலுக்குவதில் சேர்த்துக்கொள்ளப்படும். பணம் அனுப்புகையில் வேண்டிய நாவல்களின் பெயரைத்தெரிவித்து, 8 அணா நாவலுக்கு ஒரு அணா வீதம் (வெளிநாடு $1\frac{1}{2}$ அணா) தபாற்செலவுக்காக சேர்த்தனுப்பவும்.

கீழ்கண்ட இடங்களில் உள்ள நமது சந்தாநேயர்கள்

தயவுசெய்து செல்வாக்குள்ள நியூஸ் ஏஜண்டின் விலாஸத்தை நமக்குத் தெரிவித்தோ, அல்லது அவர்களை நமக்கு நேரில் எழுதச் செய்தோ உதவி புரியக் கோருகிறோம்.

செங்கற்பட்டு	நாகப்பட்டினம்	விழுப்புரம்	மானாமதுரை
சிதம்பரம்	திருவாரூர்	விருத்தாசலம்	மணியாச்சி
மாயவரம்	கரூர்	திண்டுக்கல்	பழனி

"JAGANMOHINI" Vol. XVIII No. 9 Regd. No. M. 2210.

சுடர் விளக்கு

அணா 6

வை. மு. கோதைநாயகி அம்மாள்

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT " JAGANMOHINI " PRESS, 26, CAR STREET, TRIPLICANE, MAD